Regd. No. M. 4900.　　16-பக்கங்கள்.　　தனிப்பிரதி விலை 0-2-0.

குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0.　வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21　　ஈரோடு　17-1-1948　சனிக்கிழமை　　மலர் 19.

எங்கள் திராவிடம்

[நாரா. நாச்சியப்பன்]

★

ஆரமுதாம் செந்தமிழை அன்னைஎனக் கொண்டு
அந்தமிழே வாழ்கவென ஒலிமுழக்கித் தொண்டு
சேரவுழைத் தெதிர்வருமோர் இந்திமுத லான
செயலற்ற வடமொழிகள் புதைகுழியே காண
ஆருயிரே போமெனினும் அச்சமதை நீத்தே
ஆர்வத்தால் துடித்தெழுந்து செந்தமிழைக் காத்த
வீரதால முத்துநட ராசன்முத லானோர்
விளங்கிய திராவிட நாடெங்கள் நாடே!

★

செந்தமிழை இகழ்ந்தவனைச் சேர்ந்தெதிர்த்துக் கொல்வோம்
சிறிதளவும் அயராமல் உடன்சென்று வெல்வோம்
என்றுமொழிந் திழிகனக விசயரெனும் பித்தர்
எங்கள்தமிழ்க் கண்ணகிக்குச் சிலைசுமக்க வைத்துச்
சந்திதெருச் சிரிக்கவைத்த மலையாளி சேரன்
சளைக்காமல் வடமலையில் புலிபொறித்த சோழன்
முந்திதமிழ் காத்தபெரும் பாண்டியனார் ஆட்சி
முறைகண்ட திராவிட நாடெங்கள் நாடே!

★

அறப்பெரியார் ஈவேரா சொல்லாட்சி கண்டு
ஆர்வமுடன் திராவிடர்கள் உரிமைஎண்ணம் கொண்டு
மறத்தமிழர், அறிஞர் பலர் தளபதியாய் இன்று
மாண்புடனே அணிவகுக்கப் படையினராய் நின்று
திறற்கவிஞன் கனகசுப்பு ரத்தினத்தின் பாட்டைத்
தெருவெல்லாம் முழக்கிவந்து திராவிடத்தார் கேட்டை
உறப்புரிவார் வாலொடுக்கி ஓடிடவே கண்டு
உளமகிழும் திராவிட நாடெங்கள் நா

பெண்கள் பகுதி:

எத்தனை தோழியரோ?

(பா. சண்முகவடிவு)

நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த பெண்கள் பகுதி குடி அரசில் இடம் பெற்றிருப்பதுபற்றி நாம் மகிழ்ச்சியடைவதோடு மட்டுமல்ல, ஆனந்தக் கூத்தாடவேண்டும். இன்றையத் திராவிட—நமது இனப்பெண்களின் முன்னேற்றத்திற்காக இதுமட்டுமல்ல, இன்னும் அநேகம் அநேகம் செய்ய வேண்டியவைகள் இருக்கின்றன.

நமது பெண்கள் ஒவ்வொருவரும், தம்மைச் சீர்படுத்திக் கொள்ளவேண்டும். தம்மையும், தம் இனத்தையும் உயர்த்திக்கொள்ளவேண்டும். உலகத்துப் பெண்வர்க்கத்தில் நாம் எந்த விதத்திலும் சளைத்தவர்களல்லர் எனக்காண்பித்துக்கொள்ளவேண்டும். இவைகளெல்லாம் எப்படிச்செய்வது?

இது நியாயமான கேள்விதான். சீர்திருத்தக்கொள்கை, நம்மில் சில பெண்களது உள்ளத்தில் சிறிது புகுந்திருக்கிறது. எனினும் சரியான படி எல்லாப் பெண்களது உள்ளத்திலும் அதுபரவவில்லை. சீர்திருத்தம் சீர்திருத்தம் என்றால், என்ன? சும்மா வாய்ப்பேச்சினால் சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதுமா? அல்லது கடைத்தெருவிலோ ரேஷனிலோ, பிளாக் மார்க்கட்டிலோ கிடைக்கிறதா? சீர்திருத்தம் ஒரு மூட்டை வாங்கி நம் வீட்டல் போட.

அல்ல, அல்ல! சீர்திருத்தம்என்பது கடைத்தெருவிலோ ப்ளாக்மார்க்கட்டிலோ இரண்டுமடங்கு அதிக விலையாகவோ விற்பதில்லை. அது நம்மிடந்தான் இருக்கிறது. நமது உள்ளத்தில் அதை அடித்தட்டில் போட்டு, அதன்மீது பழக்க வழக்கங்கள் என்னும் அர்த்தமற்ற கொள்கைகள், அறிவீனமான மத சம்பந்தமான பயமுறுத்தல்கள், இவைகளைப் போட்டு மூடி வைத்திருக்கின்றோம்.

அதை எப்படிக் களைவது? படால் பாம், ஆஸ்ப்ரோ முதலிய மருந்துகளினால் களைந்துவிட முடியுமா? அல்லது சுகந்த சோப்புகளினால்களைந்து விடலாமா?

இல்லை இல்லை. அவைகளைக் களைவதெனில், நமது உள்ளத்தை ஆராயும் தன்...னும், பத்திசா

சரித்திர வாயிலாக நாம் அறிகிறோம். மதத்தில் உயர்வு தாழ்வு என்ற மனப்பான்மை நம்மில் அடியோடு ஒழிய வேண்டும். அவள் தாழ்ந்த சாதி, இவள் உயர்ந்த சாதி என்ற நமது சாதிப் பெருமை அடியோடு ஒழிந்து, பரந்த நோக்கத்துடன் நாம் இருத்தல் வேண்டும்,

(2) புராணம்.

புராணத்தை நம்பும் தோழியர்களான, என் அருமைத் திராவிடத் தோழியர்களே! புராணத்தில், அன்று நளாயினி தன் கணவனைத் தாசி வீட்டிற்கு, தூக்கிச் சென்றதாகப் படிக்கிறீர்கள். அதைப்பற்றி ஒரு நிமிடமாவது சிந்தித்தீர்களா? என்னடா ஒரு பெண்ணானவள், தன்மானமற்றுத்தன் கணவனை, தாசி வீட்டிற்குக்கொண்டு போய்விட, அவள் என்ன அவ்வளவு மானங்கெட்டவளா என்று யோசித்துப்பாருங்கள். இது உண்மையா, பொய்யா? என்பது விளங்கும். மேலும் அவள் பதிவிரதா தர்மத்தினால், அப்படிச் செய்திருக்கக்கூடும் என்று நீங்கள் நினைத்தீர்களானால், அவள் நிலையில் நீங்கள் இருந்து பாருங்கள். அதாவது நீங்கள் என்னதான் பதிவிரதையாயிருந்தாலும், உங்கள் கணவனைத் தாசி வீட்டிற்குத் தூக்கிக் கொண்டு போய்விடச் சம்மதிப்பீர்களா? தூக்கிக்கொண்டு போய் விடாவிட்டாலும் போய்வா என்ற உத்தரவாவது கொடுப்பீர்களா? யோசித்துப் பாருங்கள்.

இதைப்படிக்கும் போதே உங்கள் மனம் துடிக்கிறதல்லவா? பின் எப்படி அந்த நளாயினி மட்டும் அப்படிச் செய்திருக்க முடியும்?

ஆகவே தோழியர்களே! புராண இதிகாசங்களெல்லாம் பெண்களைக் கேவலப்படுத்த வேண்டும் என்ற முறையில் எழுதப்பட்டுள்ள ஒரு கற்பனை என்பதை இந்த 1947ம் வருடத்திலும்கூட அறியாமல், வைகுண்ட எகாதசி என்ற ஒரு அர்த்த மற்ற பண்டிகைக்காக, இரவெல்லாம் கண் விழித்து, உடல்நலத்தைக் கெடுத்துக் கொள்கிறீர்களே, இது நியாயமா?

...ன்பதை அறிவோடு ஆராய்ந்து ...

...ட ஏகாதசி மோட் கண்விழித்து ...கொண்ட விடப் ...ள்!

எந்த ஆரியப் பெண்ணாவது கண் விழிக்கிறார்களா? என்பதைச் சிந்தித்துப்பாருங்கள். அவர்களுக்கு மோட்சத்திற்குப் போக இஷ்டமில்லையா? இல்லை! இதெல்லாம், ஏமாளிகளை ஏமாற்றுவதற்கு என்பது அவர்களுக்கே தெரியும்... ஆகவே, இனியாவது இத்தகைய பண்டிகைகள், புராணங்களை முறியடித்து விட்டு முன்னேற்றப்பாதையை நோக்கி வாருங்கள்.

(3) கோவில்.

மோட்சம், நரகம் என்ற பெயரால், எப்படித் திராவிடப் பெண்களாகிய நாமே ஏமாளி ஆகிறோமோ, அதே போல்தான், கோவிலுக்குக் காணிக்கை என்ற மூடப்பழக்கத்திற்கும் நாமே முன் நிற்கிறோம். அதாவது, திருப்பதிக்குப் போய் மொட்டை அடித்துக் கொள்வதற்கோ, திரௌபதி அம்மன் கோவிலுக்குப் போய்த் தீ மிதிப்பதற்கோ, சிவராத்திரி உற்சவம் என்ற பெயரால் நடு நிசியில், பேய்ச்சிக்கு ஆடுகளைப் பலி கொடுப்பதற்கோ, கடும் வெயிலில், மயான ருத்திரனுக்குக் கோழியைக் காவு கொடுப்பதற்கோ, நாம்தான்—திராவிடப் பெண்கள்தான் சென்று அறிவையும், பொருளையும், இழக்கிறோமே தவிர, எந்த ஆரியப் பெண்ணும் செல்வதில்லையே! ஏன் என்று யோசித்துப்பாருங்கள். மேலும், நாம் கோவிலுக்குச் செல்லும் மானமற்ற கொள்கையைக் கண்டித்து நமது மதிப்பிற்குரிய அய்யா—ஈரோட்டு வள்ளல், ஆற்றிய சொற்பொழிவு கடந்த 24—12—47 விடுதலைப்பேப்பரில் வந்துள்ளதைப் படித்து, அறிவுக்கு வேலை கொடுத்து, வெகு விரைவில், நம் இனம் முன்னேறும் படியான சீர்திருத்தக் கொள்கைகளைக் கடைபிடிக்க வேண்டும்,

(4) சடங்குகள்.

ஒவ்வொரு திராவிடப் பெண்களும் மிகமுக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் இதுதான்.

என்றோ இறந்துபோன நம் மூதாதையர்க்குப் பார்ப்பனர், சிரார்த்தம் என்ற பெயரால், பிண்டம் போடுகிறார்களாம். அதை நமது மூதாதையர், இருகையேந்தி வாங்கிக் கொள்கிறார்களாம்!! என்ன கற்பனை!! இது பார்ப்பனர், நம்மை ஏமாற்றிக் காசு பறிப்பதற்காக ஏற்படுத்திக் கொண்டது என்பதை உணர்ந்து, சபலபுத்தியுள்ளசில்ஆண்கள், திவசம்கொடுக்க வேண்டும் என்றாலும், நாம் அதை அவர்களுக்கு இதமாக எடுத்துரைத்து அது தேவையில்லை என்று தடை செய்ய வேண்டும். அவசியம் செய்துதான் ஆக வேண்டும். நாம் முயன்றால் ஆகாதது ஒன்றுமில்லையே! தெரியா

[தொடர்ச்சி 16ம் பக்கம்]

காட்சி 24.

[கைகேயி படுக்கையறை. படுக்கையின் மீது இருக்கும் கைகேயி தனக்குத் தானே]

கைகேயி:- ஆ! உலகமே! ஒரு மனிதனுக்கு இவ்வளவு வஞ்சகமா? இத்தனை புரட்டா? பாவி நீ என் கணவனா? என்னைக் கொலை செய்யப்பயப்படமாட்டாயே! என் மகன் கழுத்தைத் திருகப்பயப்பட மாட்டாயே! பல பெண்களோடு வாழுகின்றவன் யோக்கியனாக இருக்க முடியாது என்று சொல்லுவார்கள். ஆனால் உன்னை யோக்கியன் என்று நம்பினேன். உனக்கு எவ்வளவோ அன்பாய் நடந்து கொண்டேன். அதற்கேற்ற புத்தி கற்பித்தாய். இருக்கட்டும்! சரி. வா! உனக்காயிற்று! எனக்காயிற்று! இராமன் நாளை முடிசூட்டிக்கொண்டு நாடாள்வதைப் பார்த்து விடுகிறேன்! நீயும் கோசலையும், உங்கள் மகன் ஆட்சி புரிவதைக் கண்டு மகிழ்ந்து பூரித்து எங்களைப் பழிவாங்குவதைப் பார்த்து விடுகிறேன்! நான் உன்னிடத்தில் எள்ளளவும் பேத புத்தியில்லாமல் உண்மையான அன்பும் காதலும் கொண்டு நடந்த சரியான பதிவிரதையாக இருப்பேனாகில் உங்கள் தந்திரமும் சூழ்ச்சியும் நாசமாகட்டும்! இல்லா விட்டால் நாங்கள் தாயும் பிள்ளையும் தெருவில் நாதியற்றுத் திரியும்படியான நிலை ஏற்படட்டும்! என் வயிறு எரிவது போல் உன் வயிறு நாளை எரிய வேண்டும்! என் மனம் பதறுவதுபோல் நாளைக் கோசலை மனமும் இராமன் மனமும் பதர வேண்டும்! இல்லா விட்டால் நான் மடிய வேண்டும்! இது தான் நீதி! ஆனால் என்ன நடக்கிறதோ பார்ப்போம். (என்று சொல்லிக்கொண்டே படுக்கையில் சாய்ந்து மூர்ச்சையாகிறாள்)

தசரதன்:- (அங்கு வந்து) நாளை முடிசூட்டுக்கு வேண்டிய எல்லாக்காரியங்களும் சரிவர நடக்க ஏற்பாடு செய்துவிட்டோம். "நாளை இவ்வளவு நேரத்திற்குள் முடிசூட்டும் காரியம் நடந்து எல்லா விதப் பின் நிகழ்ச்சிகளும் நடந்து விடப்போகிறது. இனி என்ன சந்தேகம்! இனி யாரால் தடுக்க முடியும்! இந்த பகதூர் தசரதன் நினைத்த காரியம் இதுவரையில் எது தவறிவிட்டது? இந்த அற்புக் காரியம் தவறுவதற்.....

கைகேயி மகா சாமார்த்தியமும், வீரமும் கொண்டவளானாலும் அன்புக்கு—அது பொய் அன்பாயிருந்தாலும்—சுலபமாய் ஏமாறக் கூடியவளே. அவளுக்குச் சூது வாது தெரியாது. அதனாலேயே அவளை ஏமாற்றி எல்லாச்சுகமும் அனுபவித்துக் கொண்டு அவள் மகனை அனாதியாய்ப் பாட்டன் வீட்டிற்கு விரட்டி அடிக்கவும், இது வரை அவனைப் பற்றி என்ன என்று கூடச் சிந்திக்காமலும், இங்கு இராமனே இளவரசனாயிருந்து சகல போக போக்கியமும்



அநுபவிக்கவும், அநுபவம் செல்வாக்கு ஆகியவை பெறவும் முடிந்தது. இனிக் கொஞ்சம் தான். அதாவது இராமன் அரசனே ஆவதற்கு நாளை ஒரு பொழுது தான் பாக்கி இருக்கிறது. பிறகு எல்லாம் முடிந்தது. அப்புறம் பரதனோ கைகேயியோ பேசினால் தெரியும். நேரே எமனுலகு தான். நமது யோசனையே யோசனை! நமது யுக்தியே யுக்தி! [என்று தனக்குத் தானே பேசிக்கொண்டு படுக்கையை நாடி வந்தவன்... கைகேயி மயக்கத்தோ... தைப் பார்த்து... கின்றான்... அன்பே!... சிரி... ட...

டம் எவ்வித உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும், காதல் குறியையும் காணோமே. என்ன சங்கதி? [என்று பக்கத்தில் உட்கார்ந்து மேலே கை போடுகிறான்.]

கைகேயி:- [படுத்திருந்த வண்ணமே தசரதன் கையைத்தூக்கி வீசி எறிந்து விட்டுப் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவனைத்தள்ளி விடுகின்றாள்.]

தசரதன்:- அடி என் கண்ணே! ஆசைக்கண்ணாட்டி! என்ன சங்கதி? எனக்கு ஒன்றும் புரியவில்லையே. உனக்கு என்மீது ஏதாவது கோபமா? வேறு யார் மீதாவது கோபமா? நான் உனக்கு எவ்விதக் குற்றமும் செய்யவில்லையே? வேறு யார்தான் உனக்கு என்ன குற்றம் செய்யப்போகின்றார்கள். நீதான் இந்த நாடாளும் ராணியாயிற்றே! உனக்கு என்ன குறை இருக்கப்போகின்றது! உன் ஆக்கினைக்கு எதிர்மொழி ஏது? அப்படி இருக்க நீ இப்படி முடங்கிப் படுத்திருக்கும் காரணம் என்ன? உண்மையைக் கூறு? உனக்குச் சங்கடமுண்டாக்கியவர்கள் யாராய் இருந்தாலும் ஒரே வீச்சில் எமனுலகு அனுப்பி விடுகின்றேன். என்மீது ஏதாவது குற்றமிருந்தாலும் சொல்லு! நீ சொல்லுகிறபடி யெல்லாம் கேட்கின்றேன். சந்தேகம் வேண்டாம். உண்மையாய்ச் சொல்லுகின்றேன். கண்ணே!...

சுயபுத்தியும் இல்லை; :: :: சொல்புத்தியும் இல்லை!

தோழர் ஜி. டி. நாயுடு விருந்தின் போது அளித்த மருந்து!

★

கோவை, 29—12—47.

சென்னை சர்க்காரின் தொழில் மந்திரி, விவசாய மந்திரி ஆகியோரைப் பாராட்டி நேற்று மாலை தோழர் ஜி. டி. நாயுடு அவர்களின் இல்லமான "கோபால் பாக்"கில் ஒரு இனிய தேநீர் விருந்து நடைபெற்றது.

கல்வி மந்திரியான தோழர் டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார், தவிர்க்கமுடியாத சில காரணங்களால் வர இயலாமற்போய் விட்டது. சுமார் 300 பேருக்கு மேல் தேநீர் விருந்தில் கலந்து கொண்டனர். விருந்து முடிந்ததும் தோழர் ஜி. டி. நாயுடு அவர்கள் நிகழ்த்திய வரவேற்புரையாவது:-

"கனம் மந்திரிகளான சீதாராம ரெட்டி அவர்களே, மாதவமேனன் அவர்களே, சீமான்களே, சீமாட்டிகளே! இன்று, எதிர்பாராத முறையில் ஆனாலும், உங்களில் பலருக்கு நேரில் அறிமுகமான கனம் மந்திரிமார்களை சந்திக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. அவர்கள் தமது மற்ற அலுவல்களைத் தள்ளிவைத்துவிட்டு எனது அழைப்பை ஏற்றமைக்கு நான் நன்றி செலுத்துகிறேன். ஆனால் அவர்கள் எனக்கு முற்றிலும் புதியவர்கள்; நானும் அவர்களுக்கும், உங்களுக்கும் ஒரு முறையில்புதியவனாவேன். நாம் இப்போது நமது சொந்தச்சர்க்காரின் கீழிருப்பதால் நான் திறந்த மனத்தோடு ஏதாவது பேசினால் அதை யாரும் தவறாகவோ, குற்றமாகவோகருத மாட்டீர்களென்றே நம்புகிறேன். சென்ற மாதம் 15-ந்தேதி நான் ஒரு சத்திரசிகிச்சை (ஆபரேஷன்) பெறுவதற்காக சென்னை சென்ற ... திரும்பி செய்து வைத்திருந்தேன். எனினும் ஷை சத்திர சிகிச்சையில் வெற்றி பெற்று, 23 ஆண்டு கட்டுமுன்—அதாவது இந்தப் பிளவை ஏற்பட்டுத் தொந்தரவு அளிக்கத் தொடங்கு முன்-இருந்த உணர்ச்சியோடு திரும்பியுள்ளேன். நான் இப்போது நலமாக இருக்கிறேன். அதற்காக எனக்குச் சிகிச்சை செய்த டாக்டர் விஸ்வநாத மேனனுக்கும், அவருக்கு உதவி புரிந்த டாக்டர் வேணுகோபாலுக்கும் நன்றி செலுத்துகிறேன். மேலும் புகழ் பெற்ற பிரபல டாக்டர் எம். ஆர். குருசாமி முதலியார், டாக்டர் கே. கே. பண்டலை, டாக்டர் சி. எஸ். ராமசாமி அய்யர், டாக்டர் டி. பாலகிருஷ்ண பிள்ளை ஆகியோருக்கும் என் நன்றி உரித்தாகும். இன்னும், சத்திரசிகிச்சை மண்டபத்திலிருந்த மற்ற டாக்டர்களுக்கும் (அவர்கள் பெயர் தெரியவில்லை) நான் கடமைப்பட்டவனாவேன். மொத்தத்தில் அங்கு 12 டாக்டர்கள் இருந்தனர். அவர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

கடவுள் என்பதாக ஒன்று இல்லாததாலும், கடவுள் பேரில் எனக்கு நம்பிக்கை இல்லாததாலும் நான் கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டியதில்லை. எனக்குக் கடவுள் நம்பிக்கை இருந்திருக்குமானால் நான் இந்தப் புத்துயிர் பெற்று உணர்ச்சியுடனும், இளமையுடனும் திரும்பியிருக்க முடியாது. ஆனால் விவரித்துக்கூற விட்டாலும், விரைவில் சத்திர சிகிச்சை பெற்று என் அகால மரணத்தைத் தடுக்கும் பொருட்டு எனக்கு உதவிய வருமானவரி இலாகாவுக்கு நான் நன்றி கூறாமலிருக்க ... குறிப்பிடத்தக்க சந் ... சிகிச்சைபெறச் ... டைய சத்திர ... யில் குண ... சத்திர ... னி ... டத்தில் இவ்விஷயத்தைப்பற்றிப் பேசியதற்கு வருந்துகிறேன். எனினும் கூறாமலிருக்க முடியவில்லை. மேற்சொன்ன ஆபரேஷனிலிருந்து தப்பி, மறு பிறவி யெடுத்ததைப் போல நான் இங்கு வந்துள்ளதால் நான் மந்திரிமார்களுக்கும் உங்களுக்கும் புதியவன் என்று சொன்னேன்.

நான் இதற்குமுன் இம்மாதிரி பல கூட்டங்களை ஏற்பாடு செய்துள்ளேன். எனினும் இது ஒரு தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். ஏனெனில் இதன் மூலம் இந்நகரவாசிகளாகிய நாம், நமது மாவட்டத்தை—மாகாணத்தைச் சேர்ந்த இந்நகரவாசிகளாகிய நாம் நமது கனம் மந்திரிகள் மூலம் சில நன்மைகளை அடையலாம். என் அனுபவத்தில், எனது நெருங்கிய நண்பர்கள் சிலருக்கு இதுபோன்ற சில விருந்துகளை ஏற்பாடு செய்து நெருங்கிய நட்பின் காரணமாகப் பல நன்மைகளை அடையத்தவறியதோடு, மாறாகப் பல துன்பங்களுக்கும் ஆட்பட்டேன்.

நான் இந்த மந்திரிமார்களுக்கு நெருங்கிய நண்பனல்லேன். உண்மையில் இங்கு வந்துள்ளவர்களில் ஒருவர் தேர்தல் குறுக்கிட்டால் எனக்கு அரசியல் எதிரியாக ஆனாலும், எனது அரிய நண்பராவர். இன்னும், மற்ற அம்சங்களில் நாங்கள் இருவரும் நண்பர்களாவே உள்ளோம்.

பொதுவாக, ஒரு எதிராளியானவன் தன் நண்பர்களைக்காட்டிலும் விரோதிகளிடமிருந்து தன் முயற்சிகளில்வெற்றி காணக்கூடும். பல வேறுபட்ட காரணங்களால் நான் இன்னும் காங்கரசுக்கு விரோதியாகவே உள்ளேன். அக்காரணங்களை இங்கு விளக்க விரும்பவில்லை. நான் ஒரு எதிரியாயிருப்பதால் இம்மந்திரிகளிடமிருந்து சில நன்மைகளை அடைய முடியுமென்று நம்புகிறேன். அந்த நன்மைகளைப் பெறுவதற்குச், சில குறைபாடுகளை எடுத்துக

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

ஆ

இதோ! பெரியாரில் பெரியார்.

பெற்ற அனுபவத்தைப் பேசுகிறார் தோழர் அழகிரி.

★

(3-1-48ம் தேதி தொடர்ச்சி)

பெரியார் தன்னில் தானொரு வீரர். தான்மட்டும் வீரராக இருக்க விரும்புபவரில்லை. தன்னைச் சூழ்ந்துள்ள அத்தனை பேரையும் வீரராக்கவேண்டுமென்ற விருப்பமும், அதற்கேற்ற ஆற்றலும் படைத்தவர் பெரியார் ஆவார். அவர் ஒரு வீர புருஷர் மட்டுமல்ல. எளிய வாழ்க்கை நடத்தி வருபவர். அவர் அநேகமாக மூன்றாவது வகுப்பில் தான் பிரயாணம் செய்வார். அதுவும் அந்த வண்டியில் ஒரு 4வது வகுப்பு இல்லாத குறையால் தான்.

அவரது குற்றச் சாட்டுக்கு ஆத்திரப்படும் தோழர்கள் அறிவுகொண்டு சிந்திக்கவேண்டும். அநுபவிக்கவேண்டிய பொருள் இருக்கும்போது, இவர் ஏன் இப்படி ஓய்வு ஒழிச்சலின்றிச் சுற்றித்திரிகிறார் என்பதை?

இன்றும் நாளையும் திருவண்ணாமலை, மறுநாள் 15-உ பனமலை, 16-உ காட்டுமன்னார் கோயில், 17-உ விழுப்புரம், 18-உ அரசூர், இப்படி எல்லாம் இவர் ஏன் சுற்றியலைகிறார் என்பதில் உங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும். அவரது குறிக்கோளின் தன்மை அத்தகையது. அதில் அவருக்குள்ள விருப்பம் அவ்வளவு அதிகமானது. அந்த இலட்சியம் நிறைவேற அவர் அல்லும் பகலும் உழைக்கத் தயங்கார். உனக்கொரு கொள்கை கிடையாது. கொள்கையிருக்குமானால் அதில் போதிய பற்றுதல் இருக்காது. போதிய பற்றுதல் இருந்தாலும் அதற்காக உழைக்க உன் மனம் ஒப்புக்கொள்ளாது. உன் மனம் இன்பத்தையே நாடும். அவர் மனமோ இலட்சியத்தை நாடும். அவருக்குக் கருப்பைக் கண்டால் திராவிட இனத்தின் இழிவு ஞாபகத்திற்கு வரும். உனக்கோ கருப்பைக் கண்டால் காரிகையரின் கருங்கூந்தல் ஞாபகத்திற்கு வரும். சிவப்பைக் கண்டால் அவருக்கு இழிவு நீக்க முயற்சி ஞாபகத்திற்கு வரும். ஆனால், உனக்கோ உன் காதலியின் பவளச் செவ்வாய் ஞாபகத்திற்கு வரும். அதற்கு யாரென் செய்தல் கூடும்?

அன்பர்களே, அன்னாரின் இடையறாத் தொண்டின் சிறப்பை நாம் உணர்ந்திருக்கிறோமா? உணரும் நிலையிலாயினும் இருக்கிறோமா? இல்லை. இல்லை, இல்லை என்றுதான் சதுணிகிறது என்மனம். ஆம்! அவர் சுமார் 30 வருட காலமாக நம்மை மனிதராக்க எடுத்துக்கொண்டுள்ள முயற்சியை இன்றும் உணர்ந்தோமில்லை. அவ்வளவு மடையர்கள்; மிருக வாழ்வு வாழ்பவர்கள் நாம். இப்படிப்பட்ட மக்கள் வாழும் நாட்டைக் கொடிய நெடுங்கடல் தான் பொங்கி அழித்தாலென்ன? அல்லது ஒரு பெரிய பூகம்பம் தான் ஏற்பட்டு, அத்தனை பேரும் அழிந்து போனால் என்ன? அப்படி நாசமடைந்தாலும் ஒரு அறிவுள்ள சமூகமாவது பின்னர்த் தோன்ற வழி பிறக்குமே! இப்பெரியாரின் உழைப்பை யாரே மறக்க முடியும்? மறுக்கத்தான் யாரால் முடியும்? தம் உழைப்பின் பலனை இவர் காண்பதெப்போ என்று நீங்கள் துடிக்க வேண்டாமா? உங்கள் சக்திகளையெல்லாம் இப்பெரியாருக்கு நீங்கள் அடிமைப்படுத்தவேண்டாமா? அப்படித் தான் செய்யா விட்டாலும், இவரது உழைப்பின் சிறப்பை உணருமளவுக்கு உன் அறிவு மாற்றானுக்கு அடிமைப் பட்டிருந்தாலும், அல்லது உன் அறிவு மடமையிருளில் மழுங்கிக் கிடந்தாலும் சற்று ஒதுங்கியாவது இருக்கவேண்டாமா? இவரை ஏசுபவர் எத்தனை பேர்? இவரைப் பழிப்பவரும், தூற்றுபவரும் எத்தனை பேர்? நமக்குள்ளாகவே "கக்கிரி புக்கிரி" என்று பூசல் விளைவிப்பவர்கள் எத்தனை பேர்? இத்தனையையும் சகித்துக் கொண்டு இவர் இன்னும் உயிரோடும் இருக்கிறார் என்றால் அதன் பொருளென்ன? இதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது! இவற்றை எல்லாம் சட்டை செய்யாது வாழ இவரென்ன சிம்மமா, கரடியா? அல்லது நகராது கொத்தும் பாம்பா? என்பது தான் எனக்குப்புரியவில்லை.

உடல் இவ்வளவு தளர்ந்திருந்தாலும், இத்தளர்வு இவரது பேச்சில் காணமுடியவில்லையே! கூட்டம் முடிந்ததும் இன்று கூட்டம் மிக அருமை என்று கூறி விடுங்களேன்! எவ்வளவு உற்சாகத்தோடு எவ்வளவு பெருமிதத்தோடு சற்றுக் கனைக்கிறார் பாருங்கள்! தோள் தட்டி, ...
தட்டித் தொண்டார் ...
என்றழைக்கு ...
சற்று அ ...
இ ...

கருத்தெழுச்சியின் ஆழத்தை, அவற்றின் விரிவை நம்மால் என்றுமே சரியாக அளக்க முடியவில்லையே. நாம் எவ்வளவு தான் ஆழத்திற்குச் சென்று துளாவினாலும், ஆழமறியாத முத்துக் குளிக்கும் தோழன் ஏதோ ரொம்ப ஆழத்தில் சென்றுவிட்டோம் என்று கருதித், தன் வலையை வீசிக் கிடைத்தவற்றைப் பிடித்து அதை மேலிழுக்க, அதன் பளுவைக்கண்டு ஏதோ நிறைய முத்துச்சிப்பிகள் கொணர்ந்து விட்டதாகக் கருதி மகிழக், கடைசியில் அவை அத்தனையும் பாம்பும் நண்டுமாக இருக்குமானால், அவன் எப்படி அவதியுறுவானோ தன் அறியாமைக்கு வருந்தி, அதேபோல் நாமும் பெரியாரின் ஆழத்தை நம்மால் உணரமுடியவில்லையே என்று வருந்தியழுவதோடு, அவரது ஆழ்ந்த கருத்துக்களை அப்படியே பின்பற்ற வேண்டிய தவசியம் என்கின்ற முடிவுக்குத் தானே வரவேண்டியிருக்கிறது. அவரது கருத்துக்கள் கடலினுள் முத்துச்சிப்பி போன்றன. நம்முடைய கருத்துக்களோ கடலினுள் நண்டு நத்தைபோல்வனவே ஆகும்.

பெரியார் அவர்களை நான் ஏறக்குறைய 30 வருடங்களாக அறிந்திருக்கிறேன்; நெருங்கிப்பழகி இருக்கிறேன் என்றாலும், அவரது நம்பிக்கைக்கு இன்று வரை நான் பாத்திரன் ஆனேனில்லை. கொள்கையைப் பொறுத்தா? இல்லை. இயக்கத்தைப் பொறுத்தா? இல்லை. பின் எதைப் பொறுத்து என்னிடம் அவருக்கு நம்பிக்கை பிறக்கவில்லை? என்னுடைய சொந்த நிலையைப் பொறுத்துத்தான். அவர் போடும் காகிதத்துக்குக்கூடச் சரியாகப் பதில் அனுப்பியிருக்கமாட்டேன். அப்படி இருந்தும் அவர் என்னை வெறுத்து விட்டாரா? இல்லை. அதுதான் அவரிடமுள்ள சிறப்பான பண்பு. தனிமையில் எதையும் பொறுத்துக்கொள்வார்.

இத்தாலி ஒரு மாஜினியையும் ஒரு கேரிபால்டியையும் பெற்றதுண்டு. ஜெர்மனி ஒரு மார்க்ஸையும், ப்ரான்ஸ் ஒரு ரூஷோவையும், ரஷியா ஒரு

வர்ணாஸ்ரமப்பிரசாரத்தைஎதிர்த்தோ, ஆரிய நயவஞ்சகச் சூழ்ச்சிகளை எதிர்த்தோ, அல்லது நம்மவர்களின் உடைமையிலுள்ள விருப்பத்தையும் மடமையிலுள்ள பிரிதியையும் எதிர்த்தோ, அவர்களால் ஒரு நாள்கூட ஜீவித்திருக்க முடியாது. பகுத்தறிதல் பாவம் என்று நினைத்திருந்த மக்களிடையே, அவர்கள் பிறந்தார்களில்லை. மோட்ச நரகத்தைக் காட்டி மோசடி செய்யும் மக்களிடையே அவர்கள் பிறந்தார்களில்லை. ஆகவேதான் அவர்கள் விரைவில் வெற்றிகண்டார்கள். ஆனால் நம் பெரியார் பிறந்த இடமோ அப்படிப்பட்டதல்ல. ''அவனன்றி ஓரணுவும் அசையாது காண்'' என்ற நம்பிக்கையோடு, வாழ்ந்த மக்களிடையே பிறந்தார் இவர். கடவுளை வணங்காமலிருந்தால் கயமை, சாஸ்திரங்களைத் தகர்த்தால் நாத்திகம், புராணங்களை நம்பாமல்இருத்தல் நரகத்திற்கு வழி செய்து கொள்ளல், அயோக்கிய அன்னக் காவடிப் பார்ப்பனர்கள்தான் இந்நாட்டின் பூதேவர்கள் என்று நம்பியிருந்த மக்களிடையே பிறந்தார் நம் பெரியார். அப்படி வாழ்ந்த நம்மைப் பகுத்தறிவு கொண்டு சிந்திக்கும்படி செய்து, ஆதாரங்கள் பலகாட்டி நம்மைத் தலைநிமிர்ந்து நடக்கும்படி செய்தார் நம் பெரியார். இத்தகைய பெரிய வேலையை இதே சூழ்நிலையில் இந்நாட்டிலோ, அன்றி வேறு நாட்டிலோ, யாரேனும் சாதித்திருக்கிறார்களா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். நம்மவர் தலைநிமிர்ந்து வாழும் இச்சந்தர்ப்பத்தில், நாம் வாழ்கிறோம். அதுவும் நம்மைத் தலை நிமிர்ந்து வாழ வழி வகுத்துக் கொடுத்த பெரியார் வாழுங் காலத்தில், வாழ்கிறோம் என்பதற்காகத்தான் நம்மைப் பாக்கியசாலிகளாகக் கருதிக் கொள்ளவேண்டும் என்று முன்னரே குறிப்பிட்டேன். நம் முயற்சியின் முழு வெற்றியை நாம் இன்னும் காணவில்லையானாலும், வெற்றியின் நிச்சயத்தில் நம்பிக்கை கொண்டிருக்கும் நிலையிலாவது நாம் இன்று இருப்பதால் தான் நாம் பாக்கியசாலிகள் ஆகிறோம்,

பெரியார் தம் இயக்கத்தை எப்படி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் சிறகச்சிறக வளர்த்து வந்தார் என்பதைக் கவனித்துப் பாருங்கள். சுயமரியாதை இயக்கம் கண்டு அதற்கோர் திட்டத்தை ஏற்படுத்திய பெரியார், அத்திட்டத்தை நடைமுறையில் கொண்டுவரத் தம்முடன் ஒத்துழைக்க... ...என்று கொடுத்தார். உத்தியோகம் பெறுவதால் மட்டும் தம் திட்டம் வெற்றிபெற முடியாதென்பதைக் கண்டார்.

ஆகவே இனப் பெயரால் திராவிட கழகத்தைத் தோற்றுவித்தார். அதன் மூலம் ஆரியர் வேறு, திராவிடர் வேறு என்ற பிரச்னையைக் கிளப்பினார். ஆரிய நாகரீகம் வேறு, திராவிட நாகரீகம் வேறு. ஆரியக்கலை வேறு, திராவிடக்கலை வேறு. ஆரியப் பண்புகள் வேறு, திராவிடப் பண்புகள் வேறு என்றெல்லாம் ஆதாரங்களோடு விளக்கிக் கூறினார். இவ்விளக்கம் மக்களிடையே செல்வாக்குப் பெற்று வலுத்து விடவும், திராவிடர்கள் தம் கலைகளையும், தம் நாகரீகத்தையும் வளர்த்துக் கொண்டு ஏனைய நாட்டினருடன் சரி சமானமாக வாழத் திராவிட நாட்டுப் பிரிவினை கேட்க ஆரம்பித்து விட்டார்கள்.

அவரது பிரசாரத்தின் வெற்றிகாரணமாகத்தான், இன்று மாதந்தோறும் கழக மாநாடுகளும், பிரிவினை மாநாடுகளும் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன. அவரது பிரசாரத்தின் காரணமாகத்தான் இன்று ஆயிரக்கணக்கான இளைஞர்கள் நாடு பிரிவினைக்காகத் தூக்குமேடை ஏறவும் தயாராக இருந்து வருகிறார்கள்.

கடவுளைச் சந்தேகித்தால் பாபம், சாஸ்திரங்களை நிந்தித்தால் நரகம் என்று நம்பி, சிந்தனையற்ற ஏமாளிகளாயிருந்த நம்மை எப்படி இந்நிலைக்கு அழைத்து வந்தார். தெரியுமா? முதலில் கடவுளின் உற்பத்தி மார்க்கத்தையே அவர் விளக்கிக் காட்டினார். எப்படி? ஆதியில் மக்களிடையே ஒழுக்கங்கற்பிக்கப் புகுந்த பெரியார்கள் ஒழுக்கத்தின் பலனாக மோட்சத்தையும், ஒழுக்க ஈனத்தின் பயனாக நரகத்தையும், அடைவோம் என்று மக்களுக்குச் சொன்னார்கள். மோட்சமென்றால் அங்கு உழைக்காமலே உண்டு களித்து, ஊர்வசி, ரம்பை போன்ற அழகிய மங்கைகளைக் கூடிக் காலங்கழிக்கலாமென்றும், நரகத்திற்குச்செல்வோமானால், நாம் இங்கு ஒழுங்கீனமாக நடந்து கொண்டதற்காக அங்கு கொதிக்குமெண்ணெயிலிட்டுப் பொரிக்கப்படுவோமென்றும், செந்தணலின் மீது போட்டு எரிக்கப்படுவோமென்றும், கொடிய பாம்புகளும் விலங்குகளும் நம்மைக் கடித்துத் துன்புறுத்துமென்றும் கற்பனை செய்து காட்டினார்கள். மோட்ச இன்பத்திற்காகச் சிலர் ஒழுக்கமாக நடந்து கொண்டார்கள் என்றாலும், இயற்கை இச்சை ...களாகச் சிலர் பிரத்தியட்ச ... ...தவர்களாய்ப் ...னமென்று ...ாளமாக மேலும் மேலும் பயமுறுத்தவே, அவர்கள் கோழைகளாகி அதிலிருந்து ஏதாவது தப்பித்துக் கொள்ள மார்க்கமுண்டா என்று சிந்திக்க ஆரம்பித்தனர். அவர்களின் கோழைத்தனத்தை வாழ்க்கை வசதியாகச் செய்து கொள்ளலாம் என்று நினைத்த ஒருகூட்டம், ''அதற்கென்ன, கடவுளைத் தொழுதால் பாபமன்னிப்புப் பெறலாம். அவர் பாபிகளை மன்னித்து மோட்சத்திற்கு அனுப்பி வைப்பார்'' என்று கூறினார். அவர்களும் எப்படியாவது நரகத்திலிருந்து தப்பினால் போதும் என்று நினைத்தவர்கள் ஆதலால், கடவுளை நம்பி அவரைத் தொழ ஆரம்பித்தனர். பாபிகளே எப்போதும் அதிகமாதலால் அவர்களுக்கு மன்னிப்பு அளிக்கவும், கடவுளர்கள் அதிகம்உற்பத்தியாயினர். அத்தகைய கோழைத்தனம் தான் கடவுளின் உற்பத்திக்குக் காரணமென்றும், கடவுளும், மோட்சமும், நரகமும் யாவும் கற்பனைதான் என்றும் விளக்கிக் கூறினார் பெரியார்.

இதை அறிவுள்ள மக்கள் ஒப்புக்கொண்டு இவரைப் பின்பற்றினார்கள். அண்ட பிண்ட சராசரம் அத்தனையையும் உற்பத்தி செய்த அக்கடவுள் இருக்குமிடம் எங்கென்று பார்த்தால், அவர் முப்பாழுக்கும் அப்பாலாய் இருப்பவர் என்று கூறப்படுகிறது. ''அப்பால்தான் என்னப்பா இருக்கிறது?'' என்று கேட்டால் ''அதுவும் பாழடா'' என்று தான் கூறப்படுகிறது. வெறும் சூனியவெளிதான் கடவுள். அதாவது ''முப்பாழும் பாழாய் முடிவில் ஒரு சூனியமாய்'' இருக்கும் என்று கூறப்படுகிறது. பாழான இந்தச் சூனியவெளி ஏன் இப்படி நம்மைப் பாழாக்க வேண்டுமென்பதுதான் நமக்குப் புரியவில்லை.

இதைவிட்டு நம் புராணங்களுக்கு வருவோமானால் கடவுளெத்தனை என்றால் 33 கோடி தேவர்கள், 48000 ரிஷிகள் கின்னரர் கிம்புருடர், வித்தியாதரர் என்று இன்னும் எத்தனை எத்தனை தெய்வங்களோ கூறப்படுகிறது. இந்தத் தெய்வங்களுக்கே ஒரு தேசம் போதாதுபோல் இருக்கிறது.

இப்படியிருந்தும் இவர்கள் தொழும் தெய்வங்களின் உருவ லட்சணங்களைப் பாருங்கள். ''பல்லோ ஒரு காதம் பல்லிடுக்கோ முக்காதம்''. ஒரு பல்லின் அகலம் 10 மைல். ஒரு பல்லுக்கும் மற்றொரு பல்லுக்கும் இடையேயுள்ள வெளி 30 மைல். அப்படிக் கானால் அவனுடைய வாயின் அகலம் மட்டும் 610 மைல். அதாவது 16 பல் இடம் 160 மைல் 15 இடைவெளியின் இடம் 450 மைல், ஆக 610 மைல் ஆகிறது. அவன் வாய்மட்டும் இவ்வளவு அகலமானால் அவனுடைய கை எவ்வளவு? அவனுடைய கால் எவ்வளவு நீளம்? அவனுடைய உடல் எவ்வளவு பருமன்?

[தொடர்ச்சி 11ம் பக்கம்]

★ சட்டம் ★

[மா. கிருட்டினன்]

“டேய்!, உண்மையைச்சொல்லு. நீ வெள்ளிக் குவளையைத் திருடினாயா?”

“ஆமாங்க! இனிமேதிருடலிங்க! விட்டிடுங்க எசமான்!”

“டேய் வாயை மூடு”

நீதிபதி கேட்டார். குற்றவாளி விடையிறுத்தான்.

சோகம் கப்பிய முகம். அதோடு மிரட்சியும் பீதியும் கலந்திருந்தது. குற்றம் சாட்டப்பட்டவனுக்கு மீண்டும் சிறை வாழ்வு. இது சட்டம்! பின் என்ன தான் எதிர்பார்க்க முடியும் அவனிடமிருந்து?

* *

கந்தன் (குற்றவாளி) பராரி. இருபது வயது காளை. பெற்றோர், உற்றார் இல்லை. பிழைக்க வழி தெரியவும் இல்லை. பிச்சை எடுத்தான் அங்கே!...........

“டேய்! தடியனாட்டம் இருக்கிறாயே, வேலை செய்து பிழைக்கிறது தானேடா?”

“வேலை கிடைக்கலிங்க”

“வேலை கிடைக்கில்லையாம்! போய்த் திருடறது தானேடா!

இது தான் பிச்சை எடுத்ததற்குப்பலன். “தடியன், திருடு” இவைகள் உபதேசச்சொற்கள். மேலும் நடந்து கொண்டே இருந்தான் கந்தன்.

* *

நாலைந்து சிறு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களிடையே விளையாட்டுச் சாமான்கள் பல கிடந்தன. அவைகளில் கண்ணைக் கவர்ந்தது ஒரு வெள்ளிக் குவளை தான். பிச்சை எடுக்கச் சென்ற கந்தனின் கண்களையும் தன் பக்கம் இழுத்தது. அவன் கண்கள் அதையே பார்த்துக்கொண்டிருந்தது. “தடியா திருடுறது தானேடா!” என்ற சொல் மீண்டும் அவன் காதில் ஒலித்தது. கூடி விளையாடிய குழந்தைகள் பிரிந்தோடினர். அவ்வளவு தான். கண்கள் சுற்றும் முற்றும் பார்த்தன. கால்கள் வெள்ளிக் குவளையை நோக்கிப் பறந்தன. அடுத்த வினாடி கந்தனின் கந்தல் ஆடைகளுக்கிடையே மறைந்தது வெள்ளிக்குவளை!

வழியில் வந்த மனிதனிடம் “அய்யா! இந்தக் குவளையை வாங்குறீங்களா?” என்று கேட்டான் பராரி. வந்த மனிதர் குவளையைப் பார்த்தார். அதோடு பெருமிதமும் கலந்திருந்தது. தங்கள் வீட்டு வெள்ளிக்குவளையைத் திருடியவனைக் கண்டு விட்டாரல்லவா? அதன் பயன் கந்தனுக்குச் சிறை வாழ்வு.

* *

“டேய் தம்பி! ஏன் பயப்படுகிறாய். நான் சொல்லுவதைக்கேள். நமக்கு திருடினால்தான் வாழ்வு. இல்லையேல் உயிர்வாழ முடியாது. இதுதான் நான் சொல்லும் புத்திமதி”

இது கந்தன் சிறையிலிருந்து வெளியே வரும்போது ஒரு குற்றவாளி சொன்ன பிரிவு உபசார வாழ்த்து.

* *

சிறையிலிருந்து வெளி வந்து சின்னாட்கள் ஓடின. உணவில்லை. சுற்றித் திரிந்தான், பலனில்லை. குற்றவாளி சொன்ன அவ்வார்த்தைகள் கந்தனின் காதில் சதா ஒலித்த வண்ணம் இருந்தது. “ஆமாம்! சிறையில் இருந்தபோது கவலையில்லாமல் இருந்தேனே!” என்று அவன்வாய் முணு முணுத்தது. கடைவீதி வழியே நடந்தான். அவன் கண்ணும் கவனமும் எங்கெங்கேயோ பாய்ந்து கொண்டேயிருந்தது. மனதிலே பலத்த போராட்டம்!

“சட்டம் தண்டனை கொடுக்க முடியுமே தவிர, குற்றவாளியை சீர்திருத்தவாவது, நல்வழிபடுத்தவாவது முடியாது”

என்றார் அறிஞர் இங்கர்சால்! இதைமறுப்பவருக்கு அதோ......

* *

செட்டியார் கடையைவிட்டு கீழ் இறங்கி எதிர்கடைக்காரரோடு பேசிக் கொண்டிருக்கிறார். மக்கள் நடமாட்டம் அதிகம். அதனிடையே கந்தன் ஓடுகிறான். பெட்டியில் இருந்த பணப்பை கந்தனின் கைக்கு மாறுகிறது. அதோ ஓடுகிறான். ஏன்? ஓடியே விட்டான்! அவன் வேண்டுவது சிறை வாழ்வு, இல்லையேல் தேவையான பொருள்! அவ்வளவுதான்!

முன் அனுபவித்த சிறைத்தண்டனையால் திருந்தவும் இல்லை— திருத்தப்படவுமில்லை. காரணம்! சட்டம் தண்டனைதான் கொடுக்கும்! மற்று என்ன தான்செய்யும்? அறிஞரின் ஆய்வுரை வரவேற்கத்தக்கதுதானே?

“குற்றவாளிகள் நோயுள்ளவர்களுக்குச் சமம்” என்று கருதப்படுகிறது அமெரிக்க நாட்டிலே. கோழி திருடியவனுக்கு நீதிபதி கோழிப் பண்ணை வைக்க உதவி செய்தாராம்! இது மேல்நாடு! நம் நாட்டிலோ “ஆறுமாத தண்டனை” என்று கூறிவிடுவார்கள் நீதிபதிகள். குற்றவாளி திருடக் காரணம் என்ன? என்று கேள்வியே அவர்களுக்குத் தேவையில்லை. கேட்டாலோ சுருக்கமாக சொல்லிவிடுவார்கள் “இடம்தரவில்லை சட்டம்” என்று. திருந்துமா, திருத்தியமைக்கப்படுமா சட்டம்?

விழித்தெழு!

(கா. பொன்னவை.)

மாண்புடை மறத் திராவிடனே! இன்னுமா உறக்கம்! விழித்தெழு! உடல் வியர்க்க உழைக்கிறது நம் இனம். மடஞ் சாய்ந்து தீனி தின்று கொழுத்து நம்மை ஏவலர்களாக ஆக்கிக்கொண்டிருக்கிறது, அந்த மாடாடு மேய்த்து வந்த நாடோடி இனம். கூழுக்கு உப்பின்றிக் கூப்பாடு போடுகிறது நம் இனம். அரை நிர்வாணத்துடன் அண்டுவதற்குமிடமின்றி அலைகிறது நம் இனம். கிஞ்சித்தும் நெஞ்சம் சஞ்சலமின்றி நஞ்சனைய வஞ்ச ஆரியர், காலந்தவறாத கனி வகை பதார்த்த வகைகளை உண்டு, உண்டது செரிக்கத்தெருத் திண்ணைகளிலே சாரைப் பாம்புகள்போலப் புரளுகின்றனர்.

முட்டி புகுபவர்களாகவும் கூத்தர்களாகவும் நம் நாட்டினுள் புகுந்த கொடிய நரிகள் இன்று மன்னரவைக்கண் மந்திரியாகவும் மற்றவர்களையும் மயக்கும் தந்திரியாகவும், அமர்ந்து தங்களினத்தவரைத் தரணியிலே தலை தூக்கச் செய்து, இடங்கொடுத்த ஓர் வகுப்பை இல்லாதொழிக்க, அகிலவுலகின் ஆதிக்கத்தை அவர்கள் தாக்க எண்ணி அரும்பாடுபட்டு வருகின்றனர் இன்று.

சத்தியமூர்த்தியின் பேரால் நிதி சேர்த்துக் கல்லூரி கட்ட ஏற்பாடுகள் நடத்தி வருகின்றனர். இதற்குச் சேர்க்கும் நிதி நம் திராவிட நாட்டின் நிதியாகத்தான் இருக்க

(தொடர்ச்சி 10-ம் பக்கம்).

எங்கள் நன்றி.

பொங்கல் வாழ்த்து அனுப்பிய தோழர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியும், வணக்கமும் உரியதாகுக!

மானேஜர் & ஆசிரியர்.

குடி அரசு

17—1—48 சனிக்கிழமை.

விரைவில் அமுல் நடத்தட்டும்!

★

"பள்ளிக் கூடங்களுக்கு உள்ளேயோ, வெளியிலோ எந்த மத நம்பிக்கைகளையும் அல்லது அனுஷ்டானங்களையும், தூஷிக்கும்படியாகவோ, பரிகசிக்கும்படியாகவோ கருத்துகளை வெளியிடுவது நடத்தைப் பிசகாகக் கருதப்படுமென்று சென்னைக் கல்வி விதிகளும், மானிய விதிகளும் திருத்தப்பட்டிருக்கிறன்றன. இத்தகைய பிரசாரத்திற்கு நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ ஊக்கமளிக்கும் எந்த ஸ்தாபனத்திற்கும் கிராண்டுகளை மறுக்க டைரெக்டருக்கு அதிகாரம் உண்டு"

இது 15—1—48ம் நாள் தினமணியில் "பள்ளிகளில் நாஸ்திகப் பிரசாரம் கூடாது" என்ற தலைப்பில் வெளிவந்திருக்கும் செய்தியாகும்.

பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களாக இருப்பவர்கள், சைவ வைணவ மதங்களைப் போன்ற இந்து மதம், முஸ்லிம் மதம், கிறிஸ்துவ மதம், பௌத்த மதம் முதலான மத நம்பிக்கைகளையும் அல்லது அந்தந்த மதங்களின் அனுஷ்டானங்களையும் தூஷிக்கும்படியாகவோ, பரிகசிக்கும்படியாகவோ, மாணவர்களிடத்திலோ, மற்றையப் பொதுமக்களிடத்திலோ கருத்துகளைக் கூறுவது ஒழுங்கான நடத்தைக்குப் பிசகாகும். இதை அரசாங்கம் ஆதரிக்கமாட்டாது. இப்போக்கில் நடந்து வரும் ஆசிரியர்களை அந்தந்தப் பள்ளிக்கூடங்களின் நிர்வாகிகளே சி. அய். டிக்களாக இருந்து கண்டுபிடித்து உடனே விலக்கிவிட வேண்டும். இல்லையேல் இந்த மாபெரும் குற்றத்திற்கு உடந்தையாக இருந்தவர்கள் என்கிற குற்றத்திற்காக அந்தந்த நிர்வாகிகளிடத்தில் பள்ளிக்கூடச் செலவுக்காகக் கொடுத்துவரும் உதவித் தொகையை அரசாங்கம் நிறுத்திக் கொண்டு அந்த முறையில் அவர்களுக்குத் தண்டனை கொடுக்கும் அதனால் பள்ளிக்கூடம் நடைபெறாமல் நின்றுபோய் விட்டாலும் சரிதான்.

இதுதான் இந்த உத்தரவின் சாராம்சமென்று கூறலாம். இந்த மாதிரியான ஒரு உத்தரவு அதாவது கல்விவிதிகளில் இந்தத் திருத்தம், செய்திருப்பதற்குப் பொறுப்பாளி என்று சொல்லத் தக்க நிலையில் இருப்பவர், நம் மாகாணக் கல்வி மந்திரியாகிய தோழர் அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களேயாவர் எனக் கூறிவிடலாம்.

மத நம்பிக்கை அல்லது மத அனுஷ்டானம் என்பது, குறிப்பாக இந்து மதப் பட்டியலைச் சேர்ந்தவர்களிடத்தில் எந்த அளவுக்கு இருந்து வருகின்றது? இது ஒரு தனிப் பிரச்னையென்றாலும் கூட, மத நம்பிக்கை என்பது என்ன? மத அனுஷ்டானம் என்பது என்ன? இவைகளைப் பற்றி உத்தரவில் விளக்கமேயில்லை.

கடவுள், மதம் என்ற பெயர்களைக் கூறி மக்களின் வாழ்வைத் துன்பமும், தொல்லையும், ஏமாற்றமும், வஞ்சகமும் சூழ்ந்து கவ்விக் கொள்ள, மக்கள் நடைப்பிணங்களாய் இருந்து வரும் நிலைமை ஒழிந்து, "வாழ்வு வாழ்வதற்கே" "மனிதன் மனிதனாகவே மதிக்கப் படுதல் வேண்டும்" என்ற புது நிலைமை இந்த நாட்டில் புகவேண்டுமானால் மதத்தூஷணையோ, பரிகாசமோ நாட்டில் இருக்கக்கூடாது என்று உண்மையாகவே விரும்புவது திராவிடர் கழகம் ஒன்றுதான். மதத்தூஷணையாலும், மதப் பரிகாசத்தினாலும் மக்கள் மதப்புரட்டர்களுக்கு ஆளாகிப், பொருளை வீணாக்கி வாழ்வை விழலாக்கி விட்டனர் என்பதற்கு இதுவரை திராவிடர் கழகம் எத்தனையோ உதாரணங்களை எடுத்துக்காட்டி வந்திருக்கின்றது. மதத் தூஷணையும், பரிகாசமும் நாட்டிலே நடைபெறக்கூடாது; அதுவும் நாட்டின் எதிர்காலப் பிரஜைகளான சிறு மாணவர்களிடையே நடப்பதற்குப் பள்ளிக்கூடம் இடமாக இருக்கக்கூடாது என்று நாமும் வற்புறுத்திக் கூறிக்கொண்டுதான் வருகிறோம். ஆனால் நடைமுறையில் நாம் காண்பதென்ன? மதத்தூஷணைகளும், மதப்பரிகாசங்களும் வளருவதற்கும், பெருகுவதற்குமே பள்ளிகள் இடமாக இருந்து கொண்டு வருகின்றன. இந்த நிலைமை மாற வேண்டும் என்பதில் நம்மைப் போல் மகிழ்ச்சியடைபவர் வேறு எவருமிருக்க முடியாது. ஆனால் அவினாசிலிங்கமவர்களின் இந்த உத்தரவு பழைய நிலைமையை எந்த அளவுக்கு எப்படி மாற்றியமைக்கும்?

பள்ளிக்கு வருகின்ற மாணவன் ஒவ்வொருவனும் ஒவ்வொரு அவதாரங்கள் என்று சொல்லக்கூடிய மாதிரியில், உடுத்திக்கொண்டிருக்கிற உடையினாலும், பூசிக்கொண்டிருக்கிற துருநீற்றாலும் சந்தனத்தினாலும், அடித்துக்கொண்டிருக்கின்ற பட்டை நாமத்தினாலும், அணிந்து கொண்டிருக்கின்ற பூணுலாலும், மாட்டிக் கொண்டிருக்கின்ற தொப்பிகளாலும் விளங்குகிறார்கள். அல்லது பெற்றோர்கள் அவர்களை அவ்வாறு விளங்கச் செய்கிறார்கள். மாணவர்களைப் போலவே ஆசிரியர்களும் அவதாரங்களாகவே விளங்குகிறார்கள். இது வெளிப்படையாக ஒரு மதத்தை மற்றொரு மதம் தூஷிக்கவில்லை, பரிகசிக்கவில்லை என்றாலும் கூட மறைமுகமாகத் தூஷணையும் பரிகாசங்களுமே இந்த நடமாடும் உருவங்களாகும் என்பது அறிவுடைய எவருக்கும் விளங்காமல் போகாது.

அடுத்தபடியாகப் பள்ளி ஆசிரியர்கள் சிறப்பாகத் தமிழ் ஆசிரியர்கள் கற்பித்துக் கொடுக்கும் பாடத்தை எடுத்துக் கொள்ளுவோம். பெரிய புராணத்தில் திருமால் காளைமாடு; அது சிவனுக்கு வாகனம். இராமாயணத்தில் சிவன் குரங்கு; அது திருமாலுக்கு வாகனம். தேவாரத்தில் சமணர்கள்,

ரேர்ஜா முத்

குண்டர்கள், திருவிளையாடற் புராணத்தில் எண்ணாயிரம் சமணர்கள் கழுவேற்றப் பட்ட நிகழ்ச்சி. இப்படி எத்தனை எத்தனையோ உண்டு. இந்தமாதிரியான புத்தகங்கள்தான் பாடத்திற்கு என்றால், அவைகளைப் படித்துத்தான் மாணவர்கள் பரீட்சையில் தேறவேண்டும் என்றால், அவைகளைச் சொல்லிக் கொடுத்துத்தான் ஆசிரியர்கள் வயிற்றைக் கழுவ வேண்டுமென்றால், இதற்கு மதத்தூஷணை மதப்பரிகாசம் என்று கூறுவதல்லாமல் வேறு என்ன பெயர் கூறலாம் என்று நாம் நம் அவினாசியார் அவர்களைக் கேட்க ஆசைப்படுகிறோம்.

பாடத்திற்குரிய பாடப்புத்தகங்கள் மாறமாட்டாது. படிப்பிக்கின்ற ஆசிரியர்கள், படிக்கின்ற மாணவர்களின் உடையிலும் உருவிலும் மாற்றமிருக்காது. ஆனால் மதத் தூஷணையோ, மத அனுஷ்டானப் 'பரிகாசமோ விளைவிக்கின்ற கருத்துகளை, ஆசிரியர்கள் பள்ளிக்கூடத்திற்கு உள்ளேயோ வெளியிலேயோ வெளியிடக் கூடாது. இவ்வாறு அவினாசிலிங்கம் அவர்கள் ஆணையிடுவாரேயானால், அந்த ஆணையிலே அறிவுடைமையின் சம்மந்தமேயில்லை என்பதை நம்மால் எடுத்துக்காட்டாதிருக்க முடியவில்லை.

திறந்த அமைப்பிலுள்ள கக்கூஸ், வீட்டின் நடுவிடத்திலேதான் இருக்கும், ஆனால் நாற்றமடிக்கக் கூடாது என்கிறார் கல்வியமைச்சர். மலம் இருக்குமிடத்திலே நாற்றமும், மலர் இருக்குமிடத்திலே மணமும் தான் பரிமளிக்க வேண்டியதும், எவரும் எதிர்பார்க்கக்கூடியதுமாகும். ஆனால் எதிர்பார்க்க வேண்டாம் என்கிறார் இயற்கைக்குமாறாக நம் அருமை அமைச்சர். துவேஷத்தையும் பரிகாசத்தையுமே தூண்டி விடுகின்றன பாடத்திட்டங்கள். ஆனால் துவேஷம் பரிகாசம் இருக்கக் கூடாது என எதிர்பார்க்கின்றார் மதி மந்திரியார். ஆண் பெண்ணுடன் கூடி வாழ்வதுதான் இயற்கையமைப்பு; எவரும் எதிர்பார்க்கக்கூடியது. ஆண்கள் அழகான சிறுவர்களையே கூடி மகிழலாம் என்கின்றார் அமைச்சர். இதை எல்லோரும் எதிர்பார்க்க முடியுமோ? இயற்கைக்கு மாறுபாடான இந்த அமைப்பில் அவினாசிலிங்கம் அவர்களுக்கு விருப்பமாயிருக்கலாம். ஆனால் மற்றவர்களும் அவ்வாறுதான் நடக்கவேண்டும் என எதிர்பார்ப்பாரேயானால், அப்படி எதிர்பார்ப்பதிலே ஏமாற்றம் நிச்சயமாகவுண்டு என்று யாரேனும் கூறவேண்டுமோ? அது போல்தான் இந்த உத்திரவினாலும், மதத் தூஷணையும் பரிகாசமும் நீங்கிவிடும் என்று நம்அமைச்சர் அவர்கள் எதிர்பார்ப்பதுமாகும் என இப்பொழுதே நாம் கூறி விடுகின்றோம்.

எந்த மதத்தையும்—மதத்தினுடைய கோட்பாடுகளையும் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுகிற எவரும் இந்தக்காலத்தில் இல்லை. நாமத்தை அழுத்தமாக ஒருவன் போட்டால், யாருக்கோ பட்டை நாமத்தைச் சாத்தப் போகிறான் என்கிற பேச்சும்; திருநீற்றைக் கொண்டு ஒருவன் உடம்பெங்கும் பூசிக்கொள்வானேயானால், இதோ! நடமாடும் வஞ்சகப் பிண்டம் என்கிற பேச்சும், கேலிக் குறிப்போடு கண் சிமிட்டலோடு கருத்தை வெளியாக்கும் காலமிது. காலத்திலே குற்றமில்லை. அனுஷ்டான ஊழல்கள், அதன் வண்டவாளங்கள் அந்த அளவுக்கு அம்பலமாகியிருக்கின்றது.

'பயம்—ஏமாற்றல் என்ற இரண்டு நிலைகளில்தான் மதநம்பிக்கையும், மதஅனுஷ்டானமும் உலகில் இருந்து வருகின்றன. மக்களைப் பேதப்படுத்துவதற்கே— ஒருவரை ஒருவர் சுரண்டிப்பிழைப்பதற்கே அவை ஏதுவாக இருக்கின்றன. மக்கள் சமூகத்திற்கே அவற்றால் பலனில்லை. சுருக்கமாக ஒவ்வொரு மதத்திற்கும் தனித் தனியான மதஅனுஷ்டானங்கள் என்று இருப்பதே கூடாது" என்ற கருத்துக்களை ஒவ்வொருவரும் கருதத் தகுந்த அளவுக்கு மதநம்பிக்கைக்காரர், மதஅனுஷ்டானக்காரர் என்பவர்களே நடந்து காட்டி வந்திருக்கின்றார்கள்—வருகின்றார்கள். மதநம்பிக்கைக்காரர் என்பவர்கள் கூட, தங்களின் மதஅனுஷ்டானங்கள் பொய்யானவை—பிறரை ஏமாற்றுவதற்கே பயன்படக் கூடியவை— என்று உணர்ந்தே மத அனுஷ்டானங்களைக் கையாண்டு வருகின்றார்கள் என்று கூறிவிடலாம்.

சுருக்கமாகச் சொன்னால் ஏமாற்றுகிறவன், ஏமாற்றுகின்றோம் என்பதைத் தெரிந்தே ஏமாற்றுகிறான். ஏமாறுகிறவனும் ஏமாறுகிறோம் என்பதைத் தெரிந்தே ஏமாறுகிறான். இருவரும் ஒவ்வொரு வகையில் சமாதானம் செய்து கொள்கின்றார்கள். இது தான் மத நம்பிக்கையின் அடிப்படையில் மத அனுஷ்டானங்கள் உணர்த்தும் உண்மை.

இந்தச் சூழ்நிலையில் வாழும் ஆசிரியர்களிடத்திலே மட்டும், எப்படி வேறு நிலை இருக்கவேண்டும் என எதிர்பார்க்க முடியும்? தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவதுபோல, ஆண்மை சிறிதுமின்றி நயவஞ்சகமாகத், தனது சந்தேகப் பார்வைக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு சில தமிழாசிரியர்களுக்காக இந்தப் பேடித்தனமான உத்தரவை மதி மந்திரியார் ஏனோ பிறப்பிக்க வேண்டும்? மதத் தூஷணைகளுக்கும் பரிகாசங்களுக்கும் இந்த ஒரு சில தமிழாசிரியர்கள் தான் காரணம் என்று மதி மந்திரி அவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள் என்றால், அந்தக்கண்டு பிடிப்பிலே உண்மையோ நியாயமோ கொஞ்சமுமில்லை என்பதை நாம் உறுதியாகக் கூறுவோம்.

மதத் துவேஷமும், மத அனுஷ்டானங்களின் பரிகாசமும் பெருகுவதற்கும், முடிவில் அவைகள் அழிந்து ஒழிவதற்குமே இந்தத் திருத்த உத்தரவு பயன்பட முடியும். ஆதலால் இந்த அறிவு சூனியமான உத்தரவை நாமும் வரவேற்கின்றோம். உணர்ச்சியும் அறிவும் பொதுநல சேவையுமுடைய எந்த ஆசிரியர்களுக்கும் இதனால் சிறிதும் நஷ்டமில்லை என்பதோடு, எதிர்பாராத நிலையில் அவர்களின் தொண்டைத் திராவிட மக்கள் பெறுவதற்கும் இந்த உத்தரவு அனுசரணையாயிருக்கும் என்று கருதும்படியாயிருப்பதால், உத்தரவை அமுலுக்குக் கொண்டு வந்து விரைவில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு நாமும் நம் மதிமந்திரியாரைவேண்டிக்கொள்கின்றோம்.

தோழர்
பி. ஷண்முகவேலாயுதம்.

பம்பாய் பயணம்.

பம்பாய் தாராவியில் 25-1-48 தேதி நடைபெறவிருக்கும் திராவிடநாடு பகுத்தறிவு நிலைய 4-வது ஆண்டு விழாவில் கலந்து கொள்வதற்காக தோழர் பி. ஷண்முகவேலாயும் 20-1-1948 தேதி இரவு ஈரோட்டிலிருந்து புறப்பட்டு சென்னை செல்வார். 22-ந் தேதி சென்னையை விட்டுப் பம்பாய்க்குப் பிரயாணமாவார்.

ரோஜா முத்தையா

கருங்கல்பாளையத்தில் கழகத் தோழர்கள்!

ஈரோடு நகரத்தைச் சேர்ந்த கருங்கல்பாளையம் பகுதியானது "காங்கரஸ் கோட்டை" என்றும், அதில் வேறு கட்சிக்கொடி பறக்கக்கூடாதென்றும், வேறு கட்சியினர் கூட்டம் நடத்தக் கூடாதென்றும்—ஏன்—வேறு கட்சியினர் ஊர்வலமாகக்கூட அவ்வூர் வழியாக வரக்கூடாதென்றும் "ஹிட்லர்" ஆதிக்கம் செலுத்தி வந்த பகுதியாகும். சென்ற சில மாதங்களுக்குமுன் கருஞ்சட்டைப் படை ஊர்வலம் ஒன்று தோழர் பி. ஷண்முக வேலாயுதம் தலைமையில், ஈரோடு நகர எல்லாப் பகுதிகளிலும் நடைபெற்று வந்த முறையில் கருங்கல்பாளையம் பகுதிக்கும் சென்ற பொழுது அவ்வூர் காங்கரஸ் ஊழியர்கள் வழி மறித்துத் தடுத்துத் திரும்பிப் போகும்படி செய்த சேதியை அது சமயம் "விடுதலை"யில் படித்திருப்பீர்கள்.

அதே கருங்கல்பாளையத்தில் தான் தமிழ்க்கழகத்தின் சார்பாக சென்ற 14-1-48 தேதி புதன்கிழமை தோழர் பி. ஷண்முகவேலாயுதம் அவர்கள் தலைமையில் தமிழ்த்திருநாள் விழாக் கொண்டாடப்பட்டது. கருங்கல்பாளையம் தோழர்கள் அக்கப்பன், முருகு ரத்தினம் ஆகியவர்கள் உணர்ச்சிமிக்க முறையில் பேசினார்கள். அதன்பின் மத்திய திராவிட மாணவர் கழகச் செயலாளர் தோழர் எஸ். அப்பாவு பேசினார். கடைசியாக, பலத்த கைதட்டலுக்கிடையே தோழர் ஈ.வெ.கி. சம்பத் அவர்கள் அரியதொருசொற்பொழிவாற்றினார்.

ஷை விழாவிற்கு வைஸ் சேர்மன் தோழர் கே. என். குப்புசாமி பிள்ளை அவர்களும், தோழர் வேலாயுதம் பிள்ளை அவர்களும், முனிசிபல் கவுன்சிலர் எஸ். ஆர். சந்தானம் அவர்களும் வந்திருந்தனர்.

ஷை விழாவின் விளைவாகக் கருங்கல்பாளையத்திலுள்ள வாலிபர்களிடையே புத்துணர்ச்சி ஏற்பட்டிருப்பதோடு இனி மேல் இதுவரை இருந்து வந்தது போல் இல்லாமல் பல திறப்பட்ட அறிஞர்களையும் வரவழைத்துச்சொற்பொழிவாற்ற ஏற்பாடு செய்யவேண்டுமென்ற எண்ணமும் ஏற்பட்டிருப்பதாகத்தெரிகிறது.

கவிஞர் படத்தை அறிஞர் திறந்து வைத்தார்.

ஈரோடு மகாஜன ஹைஸ்கூல் சரசுவதி ஹாலில் 13-1-48 தேதி ஷை பள்ளித் தலைமை ஆசிரியர் தோழர் எம். பரமேஸ்வரன் அவர்கள் தலைமையில் ஷை படத்திறப்புவிழா நடைபெற்றது. ஷை பள்ளி ட்ராயிங் ஆசிரியர் தோழர் தம்பிரான் அவர்களால் பாரதிதாசன் படம் தயாரிக்கப்பட்டதாகும்.

அறிஞர் அண்ணாதுரை அவர்கள் அரிய சொற்பொழிவாற்றிக் கவிஞர் படத்தைத் திறந்து வைத்தார்.

தோழர் ஈ. வெ. கி. செல்வன் நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியும். இவ்வாறு இது கட்டி முடிந்தால் வ. வே. சு. அய்யர் குருகுலத்தினின்றும் ஏதேனும் மாறுபட்டிருக்குமா?

"ஆரியக்காட்சிபேரானந்தமே", "ஆரிய நாட்டினர் ஆண்மையோடியற்றும் சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்குக" என்றுபாடிய பாரதியாருக்குச்சேர்த்த நிதியில் பெரும் பகுதி யாருடையது? நம் திராவிடருடையதுதான். இது முற்றிலும் உண்மை. இது இவ்வாறிருக்க,

வ. உ. சிதம்பரம் பிள்ளை (முதன் முதல் கப்பலோட்டிய தமிழன்) க்கு நிதி சேர்க்க வேண்டுமென்றதற்கு தூத்துக்குடியில் ஆச்சாரியார் பேசியபோது இது தேவையில்லை என்றாராம்.

எத்துணை வேசித்தனமான பேச்சுப் பாருங்கள் இதுமட்டுமா? தன்மான இயக்கம் பற்றி தருக்கர்களால் தப்புப் பிரசாரங்கள் பல.

திராவிடனே மயக்கந்தவிர்! பார்ப்பனீயம் எனும் மாயமாதிடம் கொண்டிருந்தமையலைத் தவிர்! முதலில் பக்கத்திலிருந்து, உன்னைப் படுகுழியில் தள்ளிப், பாரான நினைக்கும் பார்ப்பனீயத்தைப்படுகுழியிலாழ்த்து! பார்ப்பனீயத்திற்கு அடிப்படையான ஆரியத் தளையை அறுத்து அண்மையிற் காணாமல் அகற்றிவிடு!

திராவிடனே! நம் நாடு நமதாக வேண்டுமானால், நம் திராவிட நாடு நலனடைய வேண்டுமானால், நம் திராவிட மொழி தலைதூக்க வேண்டுமானால், உண்மைத் திராவிடன் என்பதைப் பிறர் உணர வேண்டுமானால்,

தன்மான உணர்ச்சியற்றுத் தவிப்பவர் நீர்மை கண்டு, இன்னல் பலவற்றையும் பொருட்படுத்தாது அன்னோர் உயர அரும்பாடுபட்டு வரும் பெரியாரோடு சேர்ந்து முற்போக்கையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு புரட்சி செய்! முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடும் முண்டங்கள் சில உள. அப்படி மண்டிக்கிடக்கும் சுயநலக் கும்பல்களை மடமடவெனச் சாய்த்து மண்ணினுள் போட்டுப் புதை! வாழ்க திராவிடம்!

உடனே எழுதுங்கள்.

உங்களுக்குத் தேவையான நமது இயக்கப் புத்தகங்கள் எது வேண்டுமானாலும் எங்களுக்கு உடனே எழுதுங்கள்.

நாதன் கம்பெனி லிமிடெட்,
கச்சேரி வீதி, ஈரோடு.

பொங்கல் புத்தாண்டில்

டி. கே. எஸ். சகோதரர்களின் புதிய நாடகம்.

கோவை ஷண்முக அரங்கில்

14—1—48 முதல் தினசரி

உயிரோவியம்

('பிரசண்ட விகடன்' ஆசிரியர் 'ஜீவா' எழுதியது.)

★

பாடல்கள்:—கு. சா. கிருஷ்ணமூர்த்தி.

★

புதன், ஞாயிறு மாலை 6-30.

மற்ற நாட்கள் இரவு 9-30.

திங்கள் விடுமுறை.

வரியுட்பட கட்டணம்:—

4-0-0, 2-12-0, 1-10-0, 0-13-0, 0-6-6.

[6ம் பக்கத் தொடர்ச்சி]

என்று சிந்தித்துப் பாருங்கள். அவனுடைய வாயில் மட்டும் எத்தனை நகரங்கள் தோன்றியிருக்கக் கூடும் என்பதைக் கணக்கிட்டுப் பாருங்கள். இவ்வளவும் எழுதியிருந்தால் கூட நமக்குக் கவலை இருக்காது. ஏதோ கதையென்று தள்ளிவிடலாம். ஆனால் அதை நம்பித்தான் ஆகவேண்டும். அதை நம்பாவிட்டால் நரகம் என்றல்லவோ கூறிவிடுகிறார்கள், இந்த ஆஸ்திக கோடிகள். இப்படியும் ஒரு மனிதன் இருப்பானா என்றால், கேட்டால் இதற்கா நரகத்திற்குப் போகவேண்டும்?

சரி இதுதான் போகட்டும் என்று தள்ளிவிட்டு மலை எப்படியப்பா உண்டாயிற்றென்றால், மலையெல்லாம் ஒரு காலத்தில் இறக்கைகளோடு பறந்து கொண்டிருந்தனவாம். அவை தேவேந்திரனை ரொம்பவும் துன்புறுத்தவே, அவன் சிவபெருமானிடம் முறையிட்டுக்கொள்ள அவர் அந்த இறக்கைகளை அறுத்து விட்டாராம். இறக்கை அறுந்துபடவே அவை பூமியின் மீது விழுந்து மலைகளாயிருக்கின்றனவாம்.

சரி சமுத்திரம் எப்படியப்பா ஏற்பட்டதென்றால், அவை எல்லாம் தோண்டப்பட்டனவாம். இவ்வளவு பெரிய சமுத்திரத்தைத் தோண்டியவர்கள் யாரோ, அவர்கள் எங்கு தான் அந்த அந்த மண்ணை எல்லாம் போட்டார்களோ தெரியவில்லை. இப்படி எல்லாம் அண்டப்புளுகு ஆகாயப்புளுகெல்லாம் எழுதிவைத்து விட்டு, இப்படிச் சாஸ்திரம் கூறுகிறது; இதை நம்பித்தான் ஆகவேண்டுமென்று கூறினால், நீ நாசமாகப்போக! இப்படிப் பட்ட சாஸ்திரங்களைக் கொளுத்தித் தொலை என்றுதானே கூறத்தோன்றும். இப்படிக் கூறுவதா மதத்துவேஷம்? பகுத்தறிவுள்ள மனிதன் ஒப்புக் கொள்வானா இதை?

நான் ஒரு ஊரில் கடைத்தெருப் பக்கம் போயிருந்தபோது கணபதி விலாஸ் சைகிள் ஷாப் என்ற போர்டைப் பார்த்தேன். அதன் கீழ் வேகமாகப்போகும் புது சைகிள் இங்கு வாடகைக்குத் தரப்படும் என்று எழுதியிருந்தது. பேர் வைப்பதில் கொஞ்சமாவது அறிவை உபயோகப்படுத்த வேண்டாமா இவர்? கணபதி விலாஸ் சைகிள் என்றால் அது எதற்கு? நகரவா? டையர் தேயவா? ட்யூப் வெடிக்கவா? அல்லது பார் நொறுங்கவா? கணபதி விலாஸ் சைகிள் எங்காவது வேகமாய்ப்போகுமா? உன் சைக்கிள் வேகமாய்ப் போகுமென்றால், அதற்குப் பறக்கும் சைகிள் வண்டி என்று பேர் கொடேன்! கொஞ்சமாவது பொறுத்தம் வேண்டாமா பெயருக்கு? இந்த 1947-லா இப்படி ஒரு பெயர் வைப்பது.

புராணத்தில் கூறப்படும் உலகங்கள் எத்தனை தெரியுமா? ஈரேழு பதினாலுலோகங்கள். அதாவது மேலேழு, கீழேழு, அவற்றின் பெயர்களோ அதல, விதல, சுதல, தராதல........: பாதாள, கேதாள என்று போகும். எல்லாம் தல தளா தான். இந்த 14 லோகங்களிலுமுள்ள ஈ, எறும்பு, பொட்டு, புழு ஆகிய சகல ஜீவராசிகளுக்கும் எஜமானன் எமன் ஒருவன் தான். ஒவ்வொரு நிமிடமும் செத்துக்கொண்டிருக்கும் அநேக கோடி ஜீவராசிகளின் உயிர்களைச் சித்திர புத்திரன் கணக்குப்படி காலாகாலத்தில் கொண்டு செல்லக்கூடியவனும் அவன் தான். அவ்வுயிர்களை எப்படிக் கொண்டு செல்கிறான் என்றால், தன் சூலத்தால் குத்தித் தன் பாசக்கயிற்றால் சுருக்கிட்டு இழுத்துச் செல்கிறானாம். பாசக் கயிற்றால் இழுக்க உயிரென்ன மரக்கட்டை போன்ற ஒரு வஸ்தா? இத்தனை கோடி ஜீவன்களை அந்தந்த இடத்திற்குவெகு வேகமாகச் சென்று இழுத்துவர உபயோகப்படுத்தும் வாகனமென்ன தெரியுமா? மார்கழி மாதக் குளிரில் குளந்தங்கரைச் சேற்றில் புரண்டுகொண்டிருக்கும் எருமைக் கிடாவாம். எங்காவது எருமைக் கிடா மீதேறிச் சென்று, இவ்வளவு ஜீவன்களை இழுத்துக்கொண்டுவர முடியுமா? நீங்களே சிந்தித்துப் பாருங்கள். இதையெல்லாம் கேட்பது மதத்திற்கு விரோதமென்றால், அப்படிப் பட்ட அறிவுக்கு ஒவ்வாத மதத்தைத் தயவு செய்து நீயே வைத்துக்கொள்ளேன். வீணாக எங்கள் மீது சுமத்தி என் எங்கள் உயிரையும் வாங்குகிறாய்? என்று தான் கேட்கிறோம். இப்படி எல்லாம் பேசுவது நமது அராசங்கத்திற்குப் பிடிக்கவில்லையாம். பின் எப்படிப் பிடிக்கும்? ஒரு எருமை மாட்டு வாகனக் கவர்ன்மெண்டுக்கு இச் சீர்திருத்தக் கருத்துக்கள்?

அறிக்கை அனுப்புகிறார்களாம் பள்ளி ஆசிரியர்களுக்கு. புராணங்களிலுள்ள ஆபாசங்களைப் பிள்ளைகளுக்கு விளக்கிக் கூறாதே! மதத்தைப் பழிக்காதே! என்று. அத்து மீறினால் தண்டிப்பார்களாம் இவர்கள். "அத்து மீறினால்" என்றால் என்னப்பா அர்த்தம்? அத்து என்பதற்கு அளவென்ன? அதற்கு அளவு ஏற்படுத்துவது நீயாநானா? ஏனப்பா அரை குறை சுயராஜ்யத்தை வைத்துக்கொண்டே ஆனமட்டும் பதைக்கிறாய்?

உஷாரா இருங்கள்! இல்லாவிட்டால் என்ன செய்வோம் தெரியுமா? பத்திரம். ஆட்சி எங்களிடம் இருக்கிறது என்று எச்சரிக்கிறார்களாம். எம்பா எங்களை இப்படிப் பயமுறுத்துகிறாய்? நாங்களென்ன சின்னப் பொடிப்பசங்களா, உன் பயமுறுத்தலுக்கு அஞ்சி ஓட? இல்லையானால் எங்களை என்ன முட்டாள்கள் என்று கருதிக்கொண்டு பேசுகிறையா? உங்கள் மனதில் என்ன

தான் நினைத்துக்கொண்டு இவ்வளவு ஆணவமாக உளறி வருகிறீர்கள்? ஏதோ பதவி பெற்று விட்டதால் கொஞ்சம் பணக்காரர்களாகி வருகிறீர்கள் என்றால், தாராளமாப் பணக்காரர்களாகுங்களேன்! நாங்களொன்றும் அப்படி உங்களிடம் பங்குகேட்க வரவில்லையே! கொஞ்சம் ஜாக்கிரதையோடு அந்தப்பணத்தை வைத்துக் கொண்டு பிழையுங்கள்; கோயிலுக்கும் குளத்திற்கும் கொடுத்துக் குட்டிச் சுவராகாதீர்கள் என்று தானே உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறோம். இதுவா பாபம்! உங்கள் சிந்தனைக்கு விண்ணப்பம் செய்துகொள்வதா பாபம்! நீங்களே சிந்தித்து விடை தாருங்கள்.

மதம் என்றால் என்ன? அது மனிதத் தன்மைக்கு மாறுபட்டுத்தானா இருக்கவேண்டும்? மதத்தின் கொடுங்கோன்மையைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

நமது முகம் நமது உடலிலேயே மிகப்பிரதானமான ஒருஅங்கம். அதன் தோல் மிக மேன்மையானது. அதன் மீது வளரும் ரோமமோ அதைவிட மென்மையானது. அந்த ரோமத்தை அப்படியே வளர விட்டால் நாம் ஏதோ கரடி மாதிரி அல்லது குரங்கு மாதிரிக் காட்சியளிப்போம். நம்மை அப்படி இருக்க விடாமல், ஒரு பளபள்ப்பான கண்ணாடி முன் உட்கார வைத்து, நமது தோலுக்கு யாதொரு தீங்கும் நேரிடாதபடி, மகா கூர்மையான கத்திகொண்டு நமது ரோமத்தை வழித்து, நமது தலையை எண்ணையிட்டுச் சீவி, நம் முகத்துக்கு ஸ்நோவும் பவுடரும் போட்டு, நம்மை அழகுற அலங்கரித்து ஒரு மாப்பிள்ளை மாதிரி அனுப்புகிறான் நமது தோழன். அவனோர் அம்பட்டப்பய.

நமது அழுக்குப் படிந்த நாற்றமடைந்த துணி மணிகளைத்துவைத்து அவற்றிற்கு நீலமும் கஞ்சியும் போட்டுச் சலவை செய்து, கண்ணாடிபோல் பெட்டி போட்டு நாமும் நம் மக்களும் உடுத்துக் கொண்டு, மெல்லிய தென்றல் காற்று வாங்க உல்லாசமாய்ச் செல்ல உதவும் தோழன், நமக்கோர் வண்ணாரப்பய.

பங்குனி வெயிலில்நமதுபாதம்எங்கு கொப்பளித்து விடுமோ, அல்லது கல் முள் குத்தி காலைக் கெடுத்து விடுமோ என்று நாம் பயப்படாமல் இருக்க, நமது காலுக்கேற்ற செருப்பைத் தைத்துக் கொடுக்கும் தோழன், நமக்கோர் செக்கிலிப்பய.

நமது வீடு மல ஜல மூத்திரத்தால் நாற்றமெடுக்காமல் இருக்கும்படி, நமது தெருக்கள் நாற்றமெடுக்காமல் இருக்கும்படி, நமதுக்கக்கூசைக் கழுவி நமது சாக்கடையைச் சுத்தம் செய்து, நமது தெருக்களிலுள்ள குப்பைகளை அகற்றி நமக்கு அசுத்தத்தால் நோய்கள் முதலியன வராமல் இருக்க நமக்கு

உதவுபவனும், நமது வீட்டில் ஒருவர் இறந்தால் அவரது பிணம் அழுகிப்பு ழுக்கள் ஏற்படாமல் இருக்க, அதைச் சுட்டெரிக்க நமக்கு உதவுபவனுமா கிய தோழன் நமக்கோர் தோட்டிப்பய.

உண்மை உழைப்பாளிகளுக்கு இழி பட்டம் அளிப்பதுதான் மததர்மம்.

அதேபோல் பணம் ஏறஏற அதனு டைய பட்டமும் சற்று உயர்ந்து கொண்டே போகும். ஆயிரக்கணக் கான ரூபாய் பெறுமான சொத்துடை யவன், மதக்குருக்களுக்கு ஒரு சாதா ரண பணக்காரன். லட்சக் கணக்கான ரூபாய் பெறுமான சொத்துடையவன் அவனுக்குப் பிரபு. கோடிக்கணக்கு பெறுமான சொத்துடையவன் அவ னுக்கு ஈஸ்வரன். ஆகவே பணம்தான் கடவுள், மதசம்பிரதாயப்படி. **கடவு ளையும் மதத்தையும் உற்பத்தி செய் ததே அந்தப் பணம்தான்.**

ஏ மதமே! உனது ஈனத் தன்மை வெளியாகி விட்டது. இனி உன்னால் இந்நாட்டில் வாழ இயலாது. உனக் கோர் எச்சரிக்கை விடுகிறோம். நாம் மேலே கூறியவற்றிற்கு நேர்மையான சமாதானங்கூற முடியுமானால் கூறுக! இன்றேல் ஏ, மதமே! மதவாதிகளே! நீங்கள் அழிந்து படுங்கள்'' என்று எக் காளமிட்டு வருபவரும் பெரியார்தான். திராவிட நாடு பிரிந்து திராவிட மக் கள் அனைவரும் ஒன்றுபட்டு, ஒழுக்க மான நாகரிக வாழ்வு வாழ நமக்கு வழி வகுத்துத்தந்து வருபவரும் பெரியார் தான்.

அப்படிப்பட்ட பேரும் புகழும் மிக்க பெரியாரின் படத்தை நான் உங்கள் முன் திறந்து வைக்குமுன் உங்களுக் கோர் விண்ணப்பம் செய்து கொள்ள ஆசைப் படுகிறேன். இப்படத்திலுள்ள ஓவியத்தின் நிறம் இன்று பளபளப்பாக இருக்கும். ஆனால் நாளையோ மறு நாளோ கொஞ்சம் மங்கித்தான் போகும். ஆகவே பெரியாரை உங்கள் நெஞ்சத்தில் ஓவியமாகத் தீட்டுங்கள்! நெஞ்சகச் சித்திரத்திற்கு என்றுமே தேய்விருக்காது. மேலும் நீங்கள் உயி ருள்ளவரை அவரது கருத்துக்கள், கருத்துக்களினூடே பொதிந்துகிடக் கும் தனியான சிறப்புகள் ஆகியவை கள் உங்களை மேன்மைப்படுத்திக் கொண்டே வரும். ஆகவே உங்கள் இருதயத்தில் அவரைச் சித்தரித்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டு, உங்கள் சார்பாக நான் இப் பெரியார் படத்தை மூடியிருக்கும் திரையை விலக்குகிறேன். அதே போல் நீங்களும் உங்கள் மடமைத் திரையை விலக்கிப் பகுத்தறிவு கொண்டு சிந்தியுங்கள் என்று கூறி முடித்தார்.

நாசம் பண்ணுவீர்!

(ஜப்பல்பூர் தோழர் போன்னையா)

★

நாசம் என்றவுடன், தோழன் ஏதோ புதிர்ப்போடுகிறானே என்று நீங்கள் நினைக்கக் கூடும். நாசம் என்றால் அழிவு என்று பொருள். இதைக் கேட்டவுடன் உட்பொருளையறியாதோர், உள் ளம் குமுறுவர். சிலர் முணு முணுப்பர். பல தோழர்கள் யாரோ இவன் நாசக் காரன், பாவி, அறிவில்லாதவன் என்று பலவாறு வசைமாரிகள் சொரிவர். இதனால் வருத்தமோ சந்தோஷமோ யான் கொள்ள வில்லை.

நாசம் செய் என்றவுடன் பகுத் தறிவுவாதி எதை? ஏன்? எப்படி? என்ற கேள்விகளைக் கேட்பான். சிலர் உலகில் தீமையானவைகளை நாசம் செய்யவேண்டும் என்பார் கள். உண்மையே. ஆனால் இங்கு அவ்விதம் கூற முன்வரவில்லை. மேலும் நான் நடைமுறையில் புரி யச் சொல்லும் அழித்தல் என் னும் காரியம், ஹிட்லர் செய்த உலகையே மிரட்டிய அழிவுச் செயல் இல்லை. அணுக்குண்டி னால் ஏற்படும் நாசகாரியங்களைப் போல் அல்ல. அல்லது ஆகஸ்டு தியாகிகள் புரிந்த தபால் ஆபீசைக் கொளுத்துதல், கடைகளைச் சூறை ஆடுதல், வீடுகளை எரித்தல், தடியால் அடித்தல், கற்களால் எறிதல் முதலிய அறிவற்ற காரியங்களையும் புரியச் சொல்ல வில்லை.

பின் எதை? ஏன்? எப்படி? நாசம் பண்ணுவீர்! என்று சொல் லுகிறேன் எனச் சில தோழர்கள் கேட்கலாம். ஆம் கூறுகிறேன்.

தோழர்களே!

உலகிலேயே உயர்ந்த நிலைபெற்று, கலை, இலக்கியம், நாகரீகம், சிற் பம், இலக்கணம், போர்த்தொழில் முதலிய எண்ணிறந்த வகைகளில் மேம்பட்டு, இமயமுதல் கொடி நாட்டி, அன்னிய நாடுகளில் சீர்த்தி பெற்று, வியாபாரம் செய்த நம் இனம், ஆம்! நம் திராவிட இனம், ஒரு புல்லினத்தால், அதுவும் தர்ப் பைப் புல்லினத்தால், நாசம், இல்லை 2000 ம் ஆண்டுகளாக எல்லா வழிகளிலும், எல்லாத் துறைகளிலும் மிருகத்திலும் கீழான நிலைமையில் நம்மை அடி மையாகக் கொண்ட அந்தத் தர்ப் பைப் புல்லை, ஆம்! பஞ்சாங்கப் புல்லை, மோசக்காரப் புல்லை, வஞ்சகப் புல்லை, கோவில் என்று சொல்லி நம்மைக் கோவணாண்டி ஆக்கிய புல்லை, முருகன் என்று சொல்லி நம்மை மொட்டை அடித்த கோரைப்புல்லை, புரா ணம் என்று கூறிபுண்பட வைத்த புல்லை, ஆளுக்கொரு நீதி புகட் டும் அற்பப்புல்லை, திராவி டரைத் தாசி மக்கள் வேசி மக்கள் என்று கூறும் ஆரியப் புல்லை; நாணற் புல்லை அழிக்க, உங்கள் கையில் நான் கத்தி, கேடயம், வாள் அல்லது அணுகுண்டு கொடுக்க முன்வரவில்லை. அத னாலும் அசையாத அந்தப் பார்ப் பாரப் புல்லை வேறுடன் அறுத் துப் படுகுழியில் போட்டுப் புதைத்து எரிக்க, நாசம் பண்ண, அதன் கருவை அவிக்க, உங்கள் பகுத்தறிவு என்னும் மண்ணெண் ணையைக் கோருகிறேன். இன்றே வாருங்கள் பகுத்தறிவு வாதிகளே! முந்துங்கள்! சிந்தியுங்கள்!

எங்களிடம் கிடைக்கும் நூல்கள்.

அர்ச்சுனன் நிலைய வெளியீடு.

ஆசிரியர் என். இ. பாலகுரு எழுதிய,

1.	புரட்சி முரசு	ரூ.	0—12—0
2.	மக்கள் ஆட்சி	,,	0— 4—0
3.	இவள் விதவையாம்	,,	0— 3—0
4.	தமிழகம் இழந்த தளபதி	,,	0— 4—0

ஷை புத்தகங்கள் மொத்தமாகவும் சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும். வேண்டுவோர் தேவைக்கு எழுதவும்.

புதுமை நிலையம்,
வடக்குத் தெரு, கொடுமுடி.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டி நான் இவர்களோடு போராட வேண்டியவனாயிருக்கிறேன். மந்திரிமார்கள் என்னைத் தவறாகக் கருதிவிடமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு நமது தேவைகளைத் தைரியமாகவும், வெளிப்படையாகவும் இவர்கள் முன் வைக்கக் கருதுகிறேன். மேற் செல்லுமுன் ஒன்று கூறிவிடுகிறேன். அதாவது, எனக்காகவோ, எனது நண்பர், உறவினர்கட்காகவோ தொழில், வியாபாரத்துறைகளில் வசதியோ 'லைசன்சோ' பெறத் தொழில் மந்திரியிடமும், பங்கீட்டுப் பொருள்களில் வசதி பெற விவசாய மந்திரியிடமும், தற்காலக் கல்வி முறையில் நன்மை பெறக் கல்வி மந்திரியிடமும் நான் செல்ல அவசியமில்லை. நான் இத்துறைகளில் வெறுப்படைந்து, இவைகளிலிருந்து ஓய்வடைந்து விட்டேன். நான் சில குறைபாடுகளை எடுத்துக்காட்டி அவைகளைக் கூடுமான வரை திருத்தமுறச் செய்வதைத் தவிர மற்ற எதையும் விரும்பவில்லை. அக்குறைபாடுகள் திருத்தப்பட்டாலொழிய எதுவும் நடைபெறாது.

கடந்த பல ஆண்டுகளாக இது வரை யான் செய்துவந்தவை வீணென்று எனக்குத் தோன்றுகிறது. சென்ற ஓராண்டு முதல் போன மாதம் வரையில் நான் என்னுடைய மனச்சாட்சியை விற்க நேரிட்டது.

என்னுடைய மனச் சாட்சிக்கு விரோதமாகவும், உள்ளபடியே இயற்கைக்கு மாறான சட்டங்களுக்கும், விதிகளுக்கும் விரோதமாகவும், இயற்கைக்கு மாறான மக்களுக்கும், செயல்களுக்கும் விரோதமாகவும் நான் பல காரியங்களைச் செய்ய வேண்டி வந்தது. ஆனால் நான் இதையும் வெற்றிகரமாகவே அனுபவித்தேன். இந்த சத்திர சிகிச்சைக்குப் பின் என் குணத்திலும், நடவடிக்கையிலும் சிலமாறுதல்கள் ஏற்பட்டன. நமது மந்திரிமார்களின் நடவடிக்கைகளைக் கவனித்ததில் இந்த அளவுக்காவது நமது தற்கால சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டுமென என்னைத் தூண்டிற்று. நமது நாட்டின் தேவைகள், குறிப்பாக நமது மாகாணத்தின் தேவைகள் மற்ற எந்த நாட்டிற்கும் உள்ளதைவிட எண்ணிக்கையில் அதிகமாக உள்ளன. இந்திய யூனியனிலுள்ள மாகாணங்களுள் நமது தேவைகளே அதிகம். நம் மாகாணத்தின் தேவைகள் மற்ற எந்த மாகாணத்தின் தேவைகளையும் விட மிக அதிகமாக இருக்கின்றன. நமது மாகாணம் தொழில் துறையிலும், சமுதாய அமைப்பிலும் மிக மிகப் பின்னணியில் இருக்கிறது. ஆனால் முன்னேற்றத்துத் தடையான பலவிஷயங்களில் அது முன்னணியில் நிற்கிறது. ஆனால் நமது தேவைகள் அதிகமாயும், நமது பளு கனமாயும் இருப்பதால் நாம் ஏராளமான கோரிக்கைகளை முன் வைக்க வேண்டியிருக்கிறது. அவைகளிற் சிலவற்றை நான் அறிந்துள்ள போதிலும் எனக்குத் தெரியாதவை பல இருக்கின்றன. முக்கியமான உடனடியாகக் கவனிக்க வேண்டிய சிலவற்றைச் செய்யுமாறு நான் நமது மந்திரிகளை இப்போது கேட்கப் போகிறேன். எனது யோசனைகளும், கோரிக்கைகளும் இதற்கு முன் பலரால் எடுத்துக் கூறப்பட்டு அதற்குச் சர்க்காரால் வழக்கப்படி விரைவில் ஆவன செய்வதாகப் பதில் அளிக்கப்பட்டும் இருக்கின்றன. ஆனால் நாளதுவரை இச் செய்திகளைப் பத்திரிகைகளில் படித்தோமே தவிர காரியத்தில் எதுவும் நடைபெறவில்லை.

பல செயல்களும், குணங்களும் இயற்கை வழிச் செல்வன ஆயினும், அவ்வியற்கையைப் பொது நன்மைக்காக நம் வழியே திருப்ப இயலும். முன்பொருமுறை ஒரு காட்சிசாலையில் நான் இருபெட்டிகளை வைத்திருந்தேன். ஒரு பெட்டியின் மேல் "இந்த மூடியைத் திறக்க வேண்டாம்" என்று ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப்பட்டிருந்தது மற்றொரு பெட்டியின் மேல் ஒன்றும் எழுதப்படவில்லை. இருபெட்டிகளிலும் அவை எத்தனை முறை திறக்கப்பட்டன என்பதைக் காட்டப் பொறிகள் இணைக்கப்பட்டிருந்தன. முதலில் சொன்னபெட்டி 730 பேராலும், இரண்டாவது பெட்டி 18 பேராலுமே திறக்கப்பட்டிருந்தன.

இதேபோல மற்றொரு முறை சமையற்காரன் உருவில் ஒரு பொறி அமைத்து அதன் சட்டைப் பையில் ஒரு அணா நாணயத்தைப் போட்டால் உடனே சூடான ஒரு கோப்பை பால் அல்லது காப்பி தருமாறும், பெண்ணுருவில் ஒரு பொறி அமைத்து அதன் தலையில் ஓரணாவைப் போட்டால் தோளிலுள்ள சேலையுடன் கையைத் தூக்குமாறும் ஏற்பாடு செய்திருந்தேன். வந்திருந்தவர்களில் நூற்றுக்கு 5 பேர் தான் ஆண் பொறியை உபயோகித்திருந்தனர். மற்றவர்கள் பெண் பொறியையே உபயோகித்துப் பார்த்திருந்தனர்.

மேலும், மோட்டார்க்காரை மக்கள் வாங்கிப் பயன் படுத்தத் தொடங்கிய காலத்தில் ஒருகாரைக் கழுவிச் சுத்தப் படுத்தி எண்ணையிட்டுத்தர ரூ 3 என்று விளப்பரம் செய்தேன். ஒருவரும் வரவில்லை. சில நாளைக்குப் பிறகு பெட்ரோல் எண்ணை போட்டுச் செல்ல வந்த கார்களைக் கூலியில்லாமல் ஓராண்டு வரை மேற்சொன்னவாறு சுத்தம் செய்யப்பட்டது. மீண்டும், கார்களைக் கழுவி எண்ணையிடும் கூலி ரூ 1 ஆகக் குறைக்கப்பட்டது என்று விளம்பரம் செய்தேன். அப்பொழுதும்ஒருவரும்வரவில்லை. ஆனால் பிறகு மேற்சொன்ன காரியத்துக்குக் கார் ஒன்றுக்கு ரூ 5. என்று விளம்பரம் செய்தேன். அதிகமான கார்கள் மேலும் மேலும் வரத்தொடங்கின.

காட்ஜெட்டுகள் (Gadgets) ஒரு துண்டு ரூ. 1 வீதம் விற்பனைக்கு ஏற்பாடு செய்தேன். என் ஞாபகம் சரியானால், ஓராண்டு முழுவதும் பத்துப் பெட்டிகளே விற்பனையாயின. ஆனால் அவைகளின் விலையை இரட்டிப்பு மடங்காக்கியதும் புதிய பெட்டிகளைப் போல விரைவில் விற்பனையாயின.

உடல்நலங் குன்றியிருந்த ஒரு பிரமுகரிடம் நான் ஒரு முறை சில நல்ல மாத்திரைகளை ஒரு காகிதத்தில் மடித்துக் கொடுத்து உபயோகிக்கச் சொன்னேன். அவர், தான் அம்மாத்திரையின் மூலம் ஒரு குணமுங்காணவில்லை என்று கூறினார். பிறகு நான் ஆட்டுக் குட்டியின் சாணத்தை எடுத்து, அவை சிறிய மாத்திரைகள் போலிருந்ததால் நன்றாக மழையிலும் வெயிலிலும் போட்டு வெள்ளை நிறமாக்கி ஒரு சுத்தமான பாட்டிலில் போட்டு அவரிடம் கொடுத்தேன். அவர் அவைகளை உபயோகித்ததில் நல்ல குணம் ஏற்பட்டதாக விடையளித்தார்.

நான் ஏன் இத்தகைய எனது அனுபவங்களை இங்கு கூறிக்

கொண்டிருக்கிறேனென நீங்கள் வியக்கலாம். இம்மாதிரியான சம்பவங்கள் பல நமது சர்க்காரிலும் நாடோறும் நடக்கின்றன. மேற்சொன்னவைகளைப்போன்ற பல காரியங்களை மந்திரிமாரறியாமல் சர்க்கார் இலாக்காக்கள் பல செய்து வருகின்றன. தற்கால நிர்வாக இயந்திரத்திலுள்ள கோளாறுகளை மந்திரிமார்கள் அறியவழியும் நேரமுமில்லாததால் அவர்கள் மக்களுக்கு ஏதாவது நன்மை செய்ய எண்ணினாலும் செய்ய இயலுவதில்லை. உண்மையில் இப்போதுள்ள குறைபாடுகளை விரைவில் நீக்கவேண்டுமென்பதில் அவர்களுக்கு மிக்க விருப்பமே.

எடுத்துக்காட்டாக நான் சில கூறுவேன்:— சமீபத்தில் நான் இப்போது நாம் கூடியுள்ள இந்தக் கட்டிடத்தையும், பல சாதனங்களையும் நமது கல்வி மந்திரிக்களித்து, 'ஆர்தர் ஹோப் பாலிடெக்னிக்'கின் பல இயந்திர, மின்சாரப் பகுதிகளையும் தொடங்குமாறும் சில விரிவுரையாளர்களையும், டிமான்ஸ்ட்ரேட்டர்களையும் சர்க்கார் செலவில் (ஆண்டுக்கு ரூ. 10,000 க்கு மேல் போகாது!) ஏற்படுத்திக்கொள்ளுமாறும் கூறினேன். அவரும் இங்கு வந்து இவைகளைப் பார்வையிட்டு, ஆவல் மிகுதியுடன் உடனே ஏற்பாடு செய்வதாகக் கூறிச் சென்றார். சர்க்கார் செலவில் இது மிகவும் அற்பமானதே. எனினும் அவர் மேற்சொன்னவாறு உத்திரவெழுதி "செக்ரடேரியட்" ஆபீசுக்கு அனுப்பியபோது ஒரு அதிகாரி இது இவ்வருஷம் சாத்தியமில்லை என்று எழுதியனுப்பிவிட்டார். மந்திரியும் அந்த பதிலை என்னிடம் கூறுவதைத் தவிர வேறு வழியில்லாதவரானார். மந்திரியார் எல்லாவற்றையும் நேரில் கண்டும் திருப்தியுற்றும், என் மீது நம்பிக்கை வைத்தும் முழுமனதோடு ஆதரித்த திட்டம் அதிகாரியொருவரின் பேனா முனையினால் தகர்க்கப்பட்டது. ஆனால் அதே நேரத்தில் அரசாங்கம் பல இடங்களில் வசதிக் குறைவுடன் பல தொழிற் கல்லூரிகளைத் தொடங்கிக் கொண்டிருந்தது.

பலதிறப்பட்ட இயந்திர, ஆயுத சாதனங்களைத் தயாரிக்காமல் நமது நாடு, அதிலும் நமது மாகாணம் மக்களை முன்னேற்றுவதிலோ தொழில்துறையிலோ, பாதுகாப்பிலோ ஒரு படி கூட முன்னேற முடியாது. சில காலத்துக்கு முன் பலர் சுயநலத்துக்காக எனது இந்தத் தொழிலை எதிர்த்தும் எப்படியோ அட்வைசரி சர்க்காரின் தயவில் என் திட்டத்தைச் சர்க்கார் ஏற்குமாறு செய்தேன். நானும் உண்மையாகவே இத்திட்டத்தை ஆரம்பித்து டெக்னிகல் டைரக்டரின் சம்பளத்தை மாதம் ஒரு ரூபாய் என்று தீர்மானித்தேன். ஆனால் இது சம்பந்தமான பத்திரங்கள் மதராசிலோ, டெல்லியிலோ உள்ள செக்ரடேரியட் ஆபீஸ் மூலையில்—இத்திட்டத்தின் உயர்வையறியாது — உறங்கிக் கிடந்தன. நமது 'பொதுஜன சர்க்கார்' பதவியேற்றபின் அப்பத்திரங்கள் என்னவாயின என்று நான் காணச் சென்ற போது அதைக் கண்டுபிடிக்கவோ, செய்தி கூறவோ யாருமேயில்லை.

(தொடரும்)

[[illegible]ம் பக்கத் தொடர்ச்சி]

பிப்படுத்துக் கொள்ளுகிறாள்.]

தசரதன்:- அடி என் ஆருயிரே! என் பேச்சில் நம்பிக்கையில்லையா? சத்தியமாய்ச் சொல்லுகிறேன். உனக்கு என்ன வேண்டும்? அல்லது நான் என்ன செய்ய வேண்டும்? சொல்லு நீ என்ன சொன்னாலும் செய்கிறேன். அது எப்படிப்பட்ட பாபமான காரியமாயிருந்தலும் உடனே செய்கிறேன்! இராமன் மீது ஆணையாகச் செய்கிறேன்! கவலையை விடு! உன்கோபத்தை விடு! எனக்கு ஆக்கினையிடு! இதோ காத்துக் கொண்டிருக்கிறேன். (என்று கைகேயியின் கையைப் பிடித்து முகத்தில் ஒத்திக் கொள்ளுகிறான்)

கைகேயி:- (தசரதன் முகத்தைப் பார்க்காமல் திரும்பிப் படுத்தபடியே) உண்மையாகவா? சத்தியமாகவா? நான் கேட்பதைக் கொடுக்கிறீரா? நான் சொல்லுகிறபடி செய்கிறீரா? என்னைப் பார்த்துச் சத்தியம் சொல்லும்!

தசரதன்:- அடி என் சஞ்சீவியே! நான் முன்னமே சத்தியம் சொல்லவில்லையா? ஆணையிட்டுச் சொல்லவில்லையா? உனக்கு என்ன இன்று இவ்வளவு சந்தேகம்? என்று நான் உனது கட்டளையைத் தவறினேன்? என்று நான் உன் இஷ்டத்திற்கு மாறாய் நடந்தேன்? என்னை நம்பு. உன் இஷ்டத்தைச் சொல்லு. உடனே கேட்டுவிட்டு இராமனைப் பார்க்கிறேன். இதை இராமன் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்.

கைகேயி:- சரி! அப்படியானால் நான் உம்மைச் சம்பராசுரன் யுத்தத்தின் போது காப்பாற்றியதற்காக, எனக்கு இரண்டு வரம் கொடுத்து அதை எப்போது வேண்டுமானாலும் உபயோகப்படுத்திக் கொள், நீ கேட்பதைக் கொடுக்கிறேன். என்று சொன்னீரே! அந்த இரண்டு வரத்தையும் கொடுக்கிறீரா?

தசரதன்:- சீ! இதுதானா! இந்தஅற்பக் காரியத்துக்காகவா இவ்வளவு பிணக்கு? இன்னும் எத்தனை வரம் வேண்டுமானாலும் கேள். வரம் இல்லாவிட்டாலும் கொடுத்துவிட்டு மூச்சு விடுகிறேன். இரண்டு வரத்தையும் இப்போதே கேள். உன் மனம் சீக்கிரம் திருப்தியாகட்டும்! அதுவே எனதுஜன்மத்தின் முடிவான பேறு! உடனே கேள்! என் கண்ணே!

கைகேயி:- அப்படித்தான் இப்போது சொல்லுவீர்! அப்புறம் "அப்படி" "இப்படி" "அது மாத்திரம்" "இது மாத்திரம்" "ஊ" என்பீர்! தெயுரிம் உம் சங்கதி!

தசரதன்:- அய்யோ! என் உயிரே! நீ அப்படி நினைக்கலாமா? எப்படிப்பட்ட பஞ்சமா பாதகமான காரியமாயிருந்தாலும் சரி. நீ கட்டளையிட்ட உடனே செய்கிறேன். நீ கேட்ட உடனே தருகிறேன். சொல்லு. சீக்கிரம் சொல்லு! என்மனம் துடிக்கிறது. சொல்லு! சொல்லு!

கைகேயி:- அரசே! நீர் அயோத்தியைப் பரதனுக்கு முடிசூட்டவேண்டும். இது ஒரு வரம். இராமனைப் பதினான்கு வருஷம் நாட்டை விட்டுக் காட்டுக்குப் போகும்படி செய்ய வேண்டும். இது இரண்டாவது வரம். உடனே செய்யும்!

தசரதன்:- [திடுக்கிட்டு, பயந்து, ஆச்சரியமடைந்து, மனம் பதறி, வாய் குழறி] ஆ! கைகேயி! என்ன கேட்டாய்! பரதனுக்கு முடி சூட்டா! இராமன் காட்டுக்குப் போவதா! இது என்ன கனவா! நினைவா! எதிரில் பேசுவது யார்! கைகேயியா! கைகேயி! இதென்ன புத்தி உனக்கு? இது யார் சொன்னது? எவ்வளவோ யோசனையோடு எவ்வளவோ முயற்சி மீது நான் செய்திருக்கும் காரியத்தை

ராய்ச்சி நூலக அறக்கட்டளை

ஒரு வினாடியில் அடியோடு கவிழ்த்துவிடப் பார்க்கிறாய். சீ! உனக்கு இந்தப் புத்தி கூடாது! இதுஆகின்ற காரியமல்ல. இதை விட்டு விட்டு வேறு ஏதாவது கேள்.

கைகேயி:- வேறு ஒன்றும் உம்மால் எனக்கு ஆக வேண்டியதில்லை. உம்முடைய வாக்குறுதியையும், சத்தியத்தையும் நிறைவேற்றி விட்டு வேறு வேலை பாரும். அந்தப்படி நீர் செய்யவில்லையானால் நான் உயிர்வாழப் போவதில்லை. இரண்டு தடவை உமது உயிரைக் காப்பாற்றிக் கொடுத்த எனக்கு, என் உயிரைக் காப்பாற்ற நீர் சொன்னபடி நடவும். அக்கிரமமாகவும், திருட்டுத்தனமாகவும் இராமனுக்கு முடிசூட்டி உம் இஷ்டப்படி வாழலாம் என்று கருதியிருக்கிறீர்! அது ஒரு நாளும் முடியாது. நான் இறந்தபின் அந்தக் காரியத்தை நினையும்! இப்போது நீர் வாக்குக் கொடுத்தபடி நடவும்.

தசரதன்:- பெண்ணே! நான் ஒன்றும் திருட்டுத்தனம் செய்யவில்லை. வேண்டுமானால் அயோத்தியை நான்கு பிள்ளைகளுக்கும் சரிசமானமாகப் பங்கிட்டுக் கொடுத்து விடுகிறேன். சஞ்சலப்படாதே! இது உனக்குச் சம்மதம் தானா?

கைகேயி:- முடியாது! யாருடைய நாட்டை யாருக்குக் கொடுப்பது? எதற்காக நான்காய்ப் பிரிக்கிறது? அயோத்தியைப் பரதனுக்கே கொடுத்தாக வேண்டும். அது அவனுடையது. இராமன் காட்டுக்குப் போயே ஆக வேண்டும். அவன் இங்கிருந்தால் பரதனுக்கு ஆபத்து.

தசரதன்:- அம்மா! உன் விருப்பப்படி நாட்டைப் பரதனுக்கே முடி சூட்டி விடுகிறேன். இராமன் காட்டுக்குப் போகவேண்டாம். தயவு செய்து, என்னைக் கடாட்சித்து இதை மாத்திரம் ஒப்புக் கொள். பலநாளாகச் சிந்தனை செய்து செய்த தீர்மானத்தை இப்படிப் பாழாக்கி என்மனதை வேதனைப் படுத்துகிறாயே. இது தர்மமா?

கைகேயி:- முடியாது.

தசரதன்:- உன் கால்களைப் பிடிக்கிறேன்.

கைகேயி:- எதைப் பிடித்தாலும் சம்மதியேன்.

தசரதன்:- தாயே பிடிவாதம் செய்யாதே!

கைகேயி:- பிடிவாதம்தான். உம்முடைய திருட்டுத்தனமான முயற்சியை நிறைவேற்ற ஒரு நாளும் சம்மதியேன். இராமன் நாட்டிலிருந்தால் பரதன் உயிருக்கு ஆபத்துதான். இது எனக்குத் தெரியாது என்று கருதிவிட்டீர்! உங்கள் யாவருடைய தந்திரமும், வேஷமும், கெட்ட எண்ணமும், கெடும் புத்தியும் எனக்குத் தெரியும். கைகேயி பயித்தியக்காரியல்ல. ஏமாறுவதற்கு.

தசரதன்:- அம்மா! நான் வாக்குக் கொடுத்தது உண்மை தான். இந்த நாடு உன்னுடையதுதான். நீயாக இராமனுக்குத் தத்தம் கொடுத்துவிடு. அல்லது உனக்காக அவன் ஆளட்டுமே! இல்லாவிட்டால் அவன் சும்மாவாவது எங்காவது பிழைத்துப் போகட்டுமே! என் அருமை மகனைக் காட்டுக்கும் போகச் சொல்லுகிறாயே! இது நீதியா?

கைகேயி:- அதெல்லாம் ஒன்றும் என்னிடம் நடவாது. நான் சொல்லுவதுதான் நீதி. நீர் என்னைக் கேட்டு இந்தப் பட்டாபிஷேகம் ஆரம்பிக்கவில்லை. அவனும் என்னிடம் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. இராமனைக் காட்டுக்குப் போகச் சொல்லுகிறீரா? அல்லது இதோ! இந்த விஷத்தைக் குடிக்கட்டுமா? வாக்குத் தவறியவரே! உடனே இரண்டிலொன்று சொல்லும். இனி உம்மிடம் எனக்கு வேறு பேச்சு இல்லை.

தசரதன்:- [ஒன்றும் சொல்லத் தோன்றாமல் துக்கத்தில் ஆழ்ந்து தலை கவிழ்ந்த வண்ணம் சாய்ந்து கொண்டு] பெருமூச்சுவிட்டு சரி! நம் காரியம் இப்படியா ஆகவேண்டும். நாடுதான் இராமனுக்கு இல்லாமல் போயிற்றென்றால் அவன் காட்டுக்குமா போகவேண்டும்! இனி என்ன செய்வது? நாம் செய்த காரியத்துக்குப் பயன் அநுபவிக்க வேண்டியதுதான். ஆனாலும் பார்ப்போம் (என்று தனக்குத்தானே கூறியவனாய் யோசித்துக்கொண்டு நிமிர்ந்து உட்காருகிறான்)

பொழுது புலர்ந்தது.

மந்திரி சுமந்திரன்:- (வந்து) அரசே! பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய காரியமெல்லாம்முடிந்து அரசர்கள், பிரஜைகள் எல்லோரும் வந்து கூடிவிட்டார்கள். பிராமணர்கள் ஓமம் வளர்த்தல், ஜபம் செய்தல், மந்திரம் ஓதல் முதலியன நடந்துகொண்டிருக்கின்றன. இனித் தாங்களும், இளவரசரும் அங்கு வரவேண்டியதுதான் பாக்கி.

தசரதன்:- [சுமந்திரனைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக்கண்களில் நீர்ததும்பப் பேச வாயெடுக்கிறார். பேச்சு வரவில்லை.

கைகேயி:- சுமந்திரரே! அரசர் அரச நீதிக்குக் கட்டுப்பட்டு இரவெல்லாம் யோசித்து, யோசித்துக் களைப்படைந்து மயங்கியிருக்கிறார். நீர் போய் உடனே இங்கு இராமனை அழைத்து வாரும்.

சுமந்திரன்:- (ஓடோடி இராமனை அழைத்து வந்து) மகாராஜா! இளவரசர் இதோ வந்து விட்டார்.

தசரதன்:- (இராமனை ஏற இறங்கப் பார்த்துத் தலைகவிழ்ந்து கண்ணீர் விடுகின்றான்.)

இராமன்:- [மனதில் பயமும் சந்தேகமும் கவ்விக்கொள்ளத் தியங்கிப்போய் நடுங்கி நிற்கின்றான்)

கைகேயி:- இராமா! அரசர் எனக்குச் செய்திருக்கும் வாக்குறுதியை உன்னிடம் சொல்லத் தயங்குகிறார். அதை நானே சொல்லிவிடுகிறேன். அதைக் கேட்டு அந்தப்படி நடக்கிறாயா? சொல்லு.

இராமன்:- தாயே! அவர் என்ன சொன்னாலும் கேட்கிறேன்.

கைகேயி:- சரி! நீ வாக்குத் தவறமாட்டாய். சொல்லுகிறேன் கேள். இந்த நாடு பரதனுக்குச் சொந்தமானது. அவனுக்கு முடிசூட்டி நடக்கப்போகிறது. நீ 14 வருஷம் இந்த நாட்டை விட்டுக் காட்டுக்குப் போகவேண்டியது. இது அரசர் கட்டளை. உடனே நட!

இராமன்:- [திடுக்கிட்டு]அரசர் அயோத்தியைப் பரதனுக்கு முடி சூட்ட வேண்டுமென்று என்னிடம் சொல்லவில்லையே. இதை அவரே என் சொல்லக்கூடாது?

கைகேயி:- அரசர் உன்னிடம் இதைச்சொல்லி இருக்கவேண்டியது. அவர் சொன்னாரோ இல்லையோ. அது எனக்குத் தெரியாது. இப்போது சொல்லுகிறார். நீ கேட்கிறாயா? இல்லையா?

இராமன்:- பரதனுக்கு என் மனைவியைக் கேட்டாலும் கொடுப்பேன். பரதன் நாடாளட்டும்! எனக்கு ஆட்சேபனையில்லை. நான் காட்டுக்குப்போக வேண்டு மென்றால் போகத் தடை

[2ம் பக்கத் தொடர்ச்சி]

மலா, தளபதி அவர்கள், சமரும் பெண்ணாலே, சாந்தமும் அவளாலே, என்று சொல்லியிருக்கிறார்கள்?

மற்றும் திருமணமாகாத கன்னித் தோழியர்களே! உங்களுக்கு ஒரு வார்த்தை.

உங்கள் திருமணத்தைச் சீர்திருத்த முறையில் புரோகிதத்தை நீக்கி நடத்திக் கொள்ள முற்படுங்கள். உங்கள் தாய் தந்தையர் வைதீகமாகப் பழய சம்பிரதாயத்தைக் கைவிடாதவர்களாயிருந்தாலும், பயப்படாதீர்கள். புரோகிதன் வைத்துத் திருமணம் நடத்துவதாயிருந்தால் எங்களுக்குத் திருமணமே வேண்டியதில்லை, என்று ஸ்டிரைக் செய்யுங்கள். இப்படிப் புரட்சிகரமான முறையில் உங்கள் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தால், நிச்சயம் வெற்றிகிட்டும். கொள்கையில் உறுதியிருந்தால் வெற்றி நிச்சயந்தான், என்பதை எடுத்துக் காட்டுங்கள்.

இந்த சமயத்திலே, சிலர், நிந்தனைக்கு ஆளாக வேண்டுமே என்ற பயம் இல்லாமல், கடமையைச் செய்யும்போது, கலங்கலாகாது என்ற தளபதியவர்களின் வாக்கை மனதிற் கொண்டு வீரத்துடன் போராடுங்கள்! வெகுவிரைவில் நியாயம் கிடைக்கும். நம் இனப் பெண்களுக்கு ஒரு அரிய பெரிய காரியத்தைச் சாதித்த பெருமையும் கிடைக்கும். எங்கே செய்வீர்களா?

(5) பழக்கவழக்கம்.

இதன் பேரால், பண்டிகை விரதம் என்ற மூடத்தனமான கொள்கைகளை, விடாமல் தொடர்ந்து நீங்கள் கொண்டாடுவது மன்னியில் எங்களையும் குறுக்கு வழியில், இப்படிச் செய்வது தான் பழக்கமே தவிர, அப்படிச் செய்வது கூடாது என்கிறீர்கள். மறுத்து ஏதேனும் கூறினால், மிகவும் தெரிந்தவள் போல் எதிர்த்துப் பேசக் கிளம்பி

யில்லை.

கைகேயி:— நீளதையும் கொடுப்பாய்! "போகவேண்டுமென்றால்" என்பதாக ஒன்றும் எதிர்பார்க்க வேண்டாம். காட்டுக்குப்போக வேண்டியது தான். இப்பொழுதே புறப்படு! நீங்கள் தகப்பனும், மகனும் சேர்ந்து செய்த வஞ்சகம் எனக்குத் தெரியாதா?

இராமன்:- சரி! அப்படியே போகின்றேன்! விடைபெற்றுக் கொள்கிறேன். என் தாயிடமும், மனைவியிடமும் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் புறப்பட்டு விடுகிறேன். [என்று சொல்லிவிட்டுப் போகின்றான்.

காட்சி முடிகிறது.

விட்டாயே, போதும் வாயை மூடு! என்று, அடக்கப் பார்க்கும், வயது சென்ற திராவிடத் தாய்மார்களே! உங்களுக்கும் ஒரு வார்த்தை. அர்த்தமற்ற பண்டிகைகள் தீபாவளி போன்ற பண்டிகைகள் கொண்டாடுவதின் நோக்கமென்ன? நோக்கம் என்று சொல்லப்படுவதும் ஒப்புக் கொள்ளக் கூடியதல்ல. அப்படியிருக்க மூடத்தனமான பழக்க வழக்கங்கள், பண்டிகைகள் இதற்கு நாம் ஏன் பணிந்து நடக்க வேண்டும்.

நமக்குச் சுயமாக அறிவு இருக்கும்போது, பழக்க வழக்கம் என்ற பெயரால், கண்ணை மூடிக்கொண்டு சனாதனப் படுகுழியில் விழுவானேன். தாய்மார்களே! நீங்கள் என்றைக்காவது, நீங்கள் செய்யும் வேலை உங்கள் பேச்சு இவைகளைப் பற்றி யோசித்துப் பேசிச் செய்வதுண்டா? நீங்கள் ஏன் உங்கள் அறிவைக் கொண்டு சிந்திக்கக் கூடாது? நம் இனத்தின் தரம் உயரவேண்டுமெனில், உங்களது அறிவை உபயோகித்து வாழ்க்கையை நடத்தல் வேண்டும். ஒவ்வொரு தாய்மார்களும் தமது அறிவை, வெட்டிப் பேச்சுக்களில் கழிக்காது உங்களது சந்ததியான எங்களைத், தக்க பருவம் வந்ததும், வீட்டுச் சிறையில் போட்டு அடைக்கும் கொடிய பழக்கத்தை வேரறுக்க பெண் சமூகத்திற்காக ஒவ்வொரு மூச்சையும் நிமிடத்தையும், செலவு செய்யவேண்டும். காரணமற்ற சம்பிரதாயச் செயல்களினால் ஒருவருக்கும் உபயோகமற்ற வீண் செலவுகளைக் கொண்ட பண்டிகை விரதங்களை உடனடியாக நிறுத்தவேண்டும்.

விரதம் என்று முதன் முதலாக ஏற்பட்டதே, தேக ஆரோக்கியத்தை முன்னிட்டுத் தான் என்று நினைக்கிறேன். தினமும் பல உணவுகளை உட்கொண்டு தினறும் நம் ஜீரணக் கருவிகளுக்கு ஓய்வு அளிக்க வேண்டி விரதம் ஏற்பட்டிருக்கிறது எனலாம்.

ஆனால் இன்று நடப்பது என்ன? அநேக வகுப்புக்களில் விரதம் என்ற பெயர் வைத்துப் பலவிதப் பலகார பட்சணங்கள் செய்து தினசரியைவிட மூன்று மடங்கு அதிகமாக ஜீரணக் கருவிகளைத் திணறவைக்கிறார்கள். இந்த விரதத்தினால் தேகத்திற்கு ஆரோக்கியமா? அல்லது சிக்கனத்திற்கு வழியா? அல்லது இது தெய்வ ஆராதனையா? இல்லை? பழக்கம் என்ற பதில் தானே! மற்றும் தெய்வம் என்பது என்ன? அது தனக்கெனப் பட்சண பலகாரங்கள் செய்து தான் மட்டும்-தன் மக்கள் பட்டினியால் ஆங்காங்கே மடிந்து கொண்டிருக்க-வயிறு நிறைய உண்ண எண்ணுகிறதா? அல்லது அதில் ஒரு எள்ளளவு தன்வாயில் போட்டு ருசிக்கிறதா? யோசித்துப் பாருங்கள். ஒவ்வொரு வீட்டிலும் தெய்வம் பலகாரங்களைத் தின்ன

ஆரம்பித்தால், இந்த ரேஷனில் நம்மால் அதற்குப் படைத்துவைக்க இயலுமா? ஆனால் இதெல்லாம் மூடத்தனமான நம்பிக்கை என்பதை மட்டும் ஏன் உணர மறுக்கின்றோம்.

தெய்வம் எதிலிருக்கிறது? அன்பில் இருக்கிறது. **எந்த இடத்தில் தூய்மையான அன்பிருக்கிறதோ அவ்விடத்தில் தான் தெய்வத்தன்மை இருக்கிறது.** நமது பழமை வழக்கங்களுக்காக நாம் பண்டங்களைச் செலவு செய்து, அறிவைப் பாழாக்குவதைவிட அதை இன்று உண்ண உணவின்றி, நடுத்தெருவே வாசஸ்தலமாக நிற்கும் ஏழைத்தோழர் தோழியர்க்கு அளித்து அவர்கள் மனம் குளிர்ந்து வாழ்த்தினால் அதில் தெய்வத்தன்மை இல்லையா? ஏழைச் சோதரர் குழந்தைகளுக்குக் கல்வியைப் பெருக்க ஏற்படுத்தப்படும் முயற்சியில் தியாகமில்லையா?

நாம் நம் வீட்டில் விரதத்திற்குச் செய்யும் அதிகப்படி உணவுகளைக் கணக்கில்லாமல் தின்னும் அதே சமயத்தில், பத்திரிகையில் பட்டினிச் சாவு பற்றிப் பரிதாபமாக வெளிவருகிறதே அதைப்பார்த்து நமது அறிவீனச்செயல்களை நினைத்துப் பார்க்கிறீர்களா? நினைத்தால் நமக்கே வெட்கமாக இல்லையா?

ஒவ்வொரு வீரப் பத்தினிப் பெண்களும் நமது நாட்டுச் சரித்திரத்தில் அழியா இடம் பெற்றிருக்கின்றனர். அவர்களது சந்ததிகள் நாம். நாம்ஏன் நம்மைத்தாழ்த்திச்சேற்றில் அமுக்கிக் கொள்ளவேண்டும்? ஆகவே பழக்க வழக்கம் என்ற பெயரால், நீங்கள் செய்யும் மூடத்தனமான பண்டிகைகள், விரதங்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டுச் சமூகச் சீர்திருத்தப் பணியில் இறங்குங்கள் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

என் அருமைத் தோழியர்களே! நமது தவறுகளை நாமே நீக்கிக் கொள்ள முற்படவேண்டுமே தவிரப் பிற இனத்தின் மீது குற்றம் சொல்வதில் பயனில்லை. ஆகவே நமது இனத்துப் பெண்கள், முன்னேற வேண்டுமானால் ஒவ்வொருபெண்ணும் மேல் சொன்னவாறு தனது பழக்க வழக்கங்களை மாற்றி அமைத்துக் கொள்ள முயன்றால் தான் நாம் முன்னேறுவோம். இதை மனதில் வைத்து நாம் ஒவ்வொருவரும் நடத்தல் வேண்டும். இத்தகைய மனப்பான்மையுடன் நாம் ஒவ்வொரு வரும் நடக்க ஆரம்பித்தால், பழமை மக்கி மண்ணோடு மண்ணாய் மறைந்து விடும். எங்கே எத்தனை தோழியர்கள் முன்வரப் போகிறீர்கள்?

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.